
# கீறல் - 04

## 0ரம் ஆண்டு மலர்



30/-

வெளியீடு :
மின்னல் வெளியீட்டகம்
ஒலுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாரீஸ் வேல்டிங் வேர்க் ஷொப்

உங்களின் சகலவிதமான இரும்புத் தளபாட தேவைகளையும்
பொறியிலாளர் வரைபடத்திற்கமைய சர்வதேச ஒட்டல்
நிறுவகத்தால் அனுமதிக்கப்பட்ட (International Institute of
Welding) ஒட்டல் முறைகளை கையாண்டு,குறித்த நாட்களுக்குள்
நியாய விலையில் பொருட்களை செய்து பெற்றுக்கொள்ள
ஒலுவிலில் சிறந்த ஒரே இடம்



## Harees Welding Work Shop

**RDO Road, Oluvil - 03**
**Dial: 067-55248, 55016, 55014**

**அழகு! நேர்த்தி! அற்புதம்! அதுதான் ஹாரீஸ் வேல்டிங்!**

SLS தரச்சான்றிதழ் முதிரை கொண்ட தரமான ஹார்ட்வெயார்
அன் எலெக்றிகல் பொருட்களை நியாயவிலையில்
பெற்றுக்கொள்ள

## SLS ஹார்ட்வெயார் எலெக்ரிகல்ஸ்

ஹார்ட்வெயார், எலெக்ரிகல் உபகரணங்கள், வோட்டர் பம்ஸ், டியுலக்ஸ்,
எவலைன் பெய்ன்ற், அன்ரன் பீ.வி.சி. குழாய்கள், குளியலறை உபகரணங்கள்.

156, பிரதான வீதி, பாலமுனை - 01
தொ.பே. 067-55123

குறிப்பு:
எலெக்ரிகல், பிளம்பிங் போன்ற சகலவிதமான வேலைகளையும் உங்கள் வீடுகளுக்கே
நேரில் வந்து மிகக் குறைந்த விலையில் செய்து தரவும் நாம் காத்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீறல்

பிரதம ஆசிரியர்:
அஸீஸ் எம்.பாயிஸ்
உதவி ஆசிரியர்கள்:
ஐ.பீ.எம்.ஸாலிஹ்
எஸ்.எம்.எம்.நஸீறுதீன்

2002
ஜூலை-செப்டம்பர்
காலாண்டு சஞ்சிகை

தொடர்புகளுக்கு:
The Editor
KEERAL
Minnal Publication
194,Weaving Centre Road
Oluvil-02
TP: 067-55157, 55193
Fax:067-55157,
Email.minnal@yahoo.com

## ஆசிரியர் பக்கம்

இன்றைய யதார்த்த நிலைமைகள் குறித்து பெரும் தலை இடியாக உள்ளது. நிமிடத்துக்க நிமிடம் மாறும் முடிவுகளை வைத்துக்கொண்டு எப்படி நியாயத்துவத்தைப்பற்றிப் பேசஇயலும்..? விட்டுக்கொடுப்புகள் இருக்க வேண்டு மென்பதற்காக கோவணத்தை யும் கொடுத்துவிடத் துணிவது முட்டாள் தனம் தப்புச் செய்தவனை மன்னிக்கலாம். ஆனால் துரோகிகளையும் நயவஞ்ச கர்களையும் ஒருபோதும் எந்தச் சமூக மும்மன்னிக்காது.

இன்றுவரை கீறலினை கொண்டுவர நாங்கள் எதிர்கொள்ளும் சிர மங்கள் சொல்லி முடியாது. இருந்தாலும் இறைவ னின் உதவி எங்களை விட்டும் நிறுத்தப் படவில்லை. தவிர்க்க முடியாத காரணத் தால் இம்முறை கீறலின் உட்பக் கங்கள் றோணியோவில் செய்ய வேண்டியதா யிற்று. இன்ஷா அல்லாஹ் அடுத்த முறை ஓப் செட்டில் எதிர்பார்க்கலாம்.

கீறல் முற்றுமுழுதாக மக்கள் சக் தியே. இது மக்களால் உருவாக்கப்பட்ட மக்களுக்கான ஒரு சஞ்சிகையே. எல்லோருக்கும் ஏற்றதாய் இருக்க வேண்டும் என்பதற்காக இம்முறை பல- வித்தியாசம் வித்தியாசமான அம்சங்களை யும் இணைத்துள்ளோம்.

இன்னும் உங்கள் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள், ஆக்கங்கள் போன்ற வற்றை கீறல் எதிர்பார்க்கிறது.

அன்புடன்
பிரதம ஆசிரியர்

எழுதுவது பற்றி....

"என்னால் இயன்றவற்றை முயன்று, படிக்கவேண்டியவற்றைப் படித்து, சிந்திக்க வேண்டியவற்றைச் சிந்தித்து ஒவ்வொரு நூலையும் எழுதுகின் றேன். ஒரு புத்தகம் எழுத அரைவாசி நூல் நிலையத்திற்குமேல் வாசிக்க வேண்டி இருககிறது".

-ஆங்கிலமேதை ஜோன்ஸன்-

"உள்ளதை உள்ளபடி எழுதுவதே ஒரு எழுத்தாளனுடைய எழுத்தை இயற்கையை ஒட்டியதாய் இலங்கச் செய்யும்".

-சேர் வோல்ட்டர்ஸ்காட்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்துள் வாழும் இனிய தலைவர்!

யூ.எல்.ஏ.அஸீஸ் - பிரதேச செயலாளர், விஷேட ஆணையாளர்
அட்டாளைச்சேனை

இஸ்லாமிய சமூகத்தின் விடிவுக்காக தன்னையே மெழுகுவர்த்தியாக்கிய அந்த மாமனிதன் மறைந்து இன்றுடன் இரண்டாண்டுகள் சென்று விட்டன.

ஆமாம் ஏறக்குறைய இரண்டு தசாப்தங்கள் இனவிடுதலைக்காக ஓங்கி ஒலித்த அந்த சிம்மக்குரல், எம் எல்லோரதும் இதயக் கனி, எமது மாபெரும் தலைவர் கலாநிதி எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களது மறைவின் இரண்டாவது ஆண்டினையொட்டி கீறல் சஞ்சிகையின் விஷேட இவ்விதழுக்கு இச்செய்தியை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கிழக்கு வானின் விடிவெள்ளி, இலங்கைத் தேசத்தின் இதயம், அரசியல் விவேகி, அரசியல் ஞானி என்றெல்லாம் எமது தலைவரை நாம் புகழ்ந்து மகிழ்ந்த போதெல்லாம் எள்ளி நகையாடியவர்களும் இன்று வாய் நிறைய அன்னாரைப் புகழ்வதை நாம் காணும் போதெல்லாம் தலைவர் மறைந்து விட்டாலும் தலைவரின் பெறுமதியும் தீர்க்கதரிசனமும் என்றுமே நிலையானவை என்பதை நிருபித்துள்ளன.

ஒரு மனிதனுடைய வாழ்வில் அமைய வேண்டிய அத்தனை ஒழுக்க மான்புகளும் வழிகாட்டல் பண்புகளும், தனித்துவமான குணாம்சங்களும், சகலரும் பின்பற்றக் கூடிய தலைமைத்துவ முன் மாதிகளும் தலைவர் அஷ்ரஃப் அவர்களிடம் இயற்கையாகவே குடிகொண்டிருக்கக் காணப்பட்டன.

இலங்கை வாழ் இஸ்லாமிய சமூகம் இன்று முகங்கொடுக்கின்ற அத்தனை சவால்களுக்கும், தேவைகளுக்கும் மறைந்த தலைவர் அவர்களது சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் இடையறாது தொடர்வதன் மூலமே பரிகாரம் காண முடியும் என்ற பகிரங்க உண்மை இன்று சந்தேகத்துக்கிடமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளமை அன்னாரது சாணக்கியத்துக்கு சான்றுரையாக அமைந்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் அனைவரும் அன்னாரது தேவையை எண்ணி மனமுருகிக் கொண்டிருக்கும் இவ்வேளையிலே தலைவர் அவர்களது எண்ணங்களையும், சிந்தனைகளையும் நிறைவேற்றப்படுபடுவதும், அவரது தூர திருஷ்டிமிக்கக் கனவுகளையெல்லாம் நிதர்சனமாக்க தியாக சிந்தனையுடனும் அர்ப்பணிப்புடனும் உழைப்பதுமே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகவும் கண்ணியமாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை. அல்லாஹ் நமது தலைவரின் அத்தனை செயற்பாடுகளையும் பொருந்தி, உயர்ந்த சுவனத்தில் சேர்த்து வைக்க பிரார்த்திப்போமாக!

ஆமீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் அல்ல பேய்களுடன் பேசினாலும் எமக்குக் கவலையில்லை

மௌனி

கீறல் தனது இவ்விதழுக்கு முந்திய இதழில் இவ்வரசியல் பகுதியில் சில கருத்துக்களைக் கூறியிருந்தது. 'தமிழீழ விடுதலைப் புலிகளின் அத்தனை நடவடிக்கைகளும் தனிநாட்டை நோக்கிய காய் நகர்த்தல்களாகவே அமைந்துள்ளன என்றும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை பிரபாகரனின் எந்த உறுதி மொழியையும் நம்பக் கூடாது என்றும் எமக்கென்று ஒரு தெளிவான நிலைப்பாடு முன்கூட்டியே இருக்க வேண்டும் என்றும் கீறல் கூறிய கருத்துக்களில் சில இன்று நிதர்சனங் களாகப் பட்டுள்ளன.

புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையும் மூதூரிலும் அதனைத் தொடர்ந்து வாழைச்சேனையிலும் புலிகளின் பின்னணியில் அரங்கேற்றப் பட்ட வன்முறைகளும் 'கீறல்' வெளியிட்டு இருந்த கருத்துக்களை மெய்ப்பித்துக் காட்டியிருக்கின்றன.

புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை அவர்களின் கபட அரசியலைப் புரிந்த எவரும் குறைத்து மதிப்பிட மாட்டார்கள். புலிகளின் இக் கோரிக்கை இரண்டு நோக்கங்களுக்காக முன் வைக்கப்பட்டிருக்க முடியும்

1. இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் அதிகாரத்தைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு தமக்கு எவ்வளவுக்கு இயலுமோ அந்தளவுக்கு தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு படிப்படியாகத் தனிநாட்டில் ஸ்தாபி தத்தை நோக்கி முன்னேறுவது.
2. தற்போது சர்வதேச ரீதியில் உருவாகியிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சூழ்நிலையிலிருந்தும் தங்கள் மீதான சர்வதேச நாடுகளின் தடைகளில் இருந்தும் மீண்டு கொள்வதற்காக இந்த இடைக்கால நிர்வாகத்தைப் பயன்படுத்துவது.

இவ்விரு கோணங்களும் புலிகளின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டின் பின்னே இருக்க முடியும் இந்நிலையில் முஸ்லிம் அரசியல் நிலைப்பாடு எதுவாக இருக்க முடியுமென நாம் சிந்திக்க வேண் டியிருக்கிறது.

ரஊப் ஹக்கீம் அவர்கள் அண்மையில் இலண்டன் சென்று திரும்பியுள்ளார். பேங் கொக் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து முஸ்லிம்கள் தரப்பாகக் கலந்து கொள்வதா? அல்லது அரசியல் தரப்பில் கலந்து கொள்வதா? என்று தீர்மானிக்க முடியாமல் திரிசங்கு நிலையில் திணறிக் கொண்டிருந்தது. முஸ்லிம் காங்கிரசில் அரசாங்கத்தின் பதவிகளை வகிப்பவர்கள் அனைவரும் தத்தம் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு பேச்சு வார்த்தையில் 3ம் தரப்பாகவே கலந்து கொள்ள வேண்டும் என கட்சிக் குள்ளும், வெளியேயும் அழுத்தங்கள், அதிகரித்துக் கொண்டிருந்த வேளை தெளிவான எந்த முடிவையும் பெற முடியாமல் இருந்தது.

அரசாங்கம் எதனையும் தீர்மானமாக முஸ்லிம்கள் சார்பில் சொல்லக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய நிலையில் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

எனவே, எம் முடிவை எடுக்க வேண்டு மானாலும் புலிகளைச் சந்தித்தே ஆகவேண்டிய இக்கட்டான சூழ்நிலை இன்று முஸ்லிம்களுக்கு. இதனால்தான் நோர்வே தூதரகம் மூலம் சந்திப்புக்கான அனுமதி கோரப்பட்டு, ஹக்கீம் அவர்கள் லண்டன் பறந்து சென்று அன்ரன்பாலசிங்கத்தைச் சந்தித்தார். தற்போது, அன்ரனின் கருணை யுடன் முடிவு வெளியாகியி ருக்கிறது. செப்டெம்பர் பேச்சுவார்த்தையில் அரசாங் கத்தரப்பிலும், நவம்பர் பேச்சு வார்த்தையில் முஸ்லிம் குழுவுக்கு தலைமை தாங்கியும் முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொள்கிறது. இவற்றுக்கிடையில் வன்னி யில் மீண்டும் பிரபாகரனுடன் கலந்துரையாடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளை உன்னிப்பாகக் கவனிக்கும்போது ஒரேயொரு முடிவுக்கே எம்மால் வர முடிகிறது. அதாவது, வடக்கு கிழக்கைப் பொறுத்வரை சுயமான எந்த முடிவுக்கும்அரசாங்கத்தால் வரமுடிய வில்லை அல்லது அரசாங்கம் சுயமாக முடிவெடுக்க விரும்பவில்லை என்பது தான் அது. எனவேதான் 'எதை வேண்டு மானாலும் புலிகளுடனேயே பேசிக்கொள் என்ற நிலை இருந்ததாலேயே ஹக்கீம் லண்டன் பறந்தார்.

இந்நிலையில் மு.கா. க்கு நாம் கூறிக்கொள்ள விரும்புவது இதைத்தான்: எமக்கென்றுதீர்வொன்றை எட்டிக் கொள்வதற்காக யாரோடு பேசவேண்டியிருந்தாலும் பரவாயில்லை, ஆனால் பேசப் போவது சர்வதேசக்கண்காணிப்புக் குழுவின்கண்களிலேயே' மண்ணைத்தூவிவிட்டு சிலவேளை பகிரங்கமாகவும் பல வேளைகளில் மறைமுகமாகவும் அரசாங்க புலி உடன்பாட்டை பாரதூரமாக மீறிக் கொண்டிருக்கும் நயவஞ்சகத்தன அரசியல் நடாத்தும் புலிகளுடன் என்பதை மு.கா. தலைமை தம் நினைவில் ஆழப்பதித்துக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னர் தாமும் பிரபாகரனும் சேர்ந்து வெளியிட்ட ஒப்பந்தத்தில், புலிகளாலேயே பகிரங்கமாக உலகறிய விரட்டியடிக்கப்பட்ட வட மாகாண முஸ்லிம்களை 'இடம்பெயர்ந்து வாழும்..' என்னும் அடைமொழியால் வர்ணித்ததைப் போன்ற பாரிய தவறுகளை இனியும் மு.கா. தலைமை செய்யக் கூடாது.

பேச்சுவார்த்தையின் போது புலிகளிடம்தாம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக எதனைக் கோரப்போகிறோம் என்ற தெளிவான முடிவோடு செல்ல வேண்டும். 'ஈரலைக் கேட்டால்தான் எலும்பாவது கிடைக்கும்' என்ற பித்தலாட்டங்களையெல்லாம் விட்டு விட்டு கலந்தாலோசனை மூலம் பெறப்பட்ட ஒரு காத்திரமான முடிவில் விடாப்பிடியாக இருக்க வேண்டும். ஏனெனில் இடைக்கால நிர்வாகம் என்பது அரசியல் அமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்படாத ஒன்று.

அப்படி உத்தரவாதப்படுத்தப்படாமலேயே அது வழங்கப்படப் போவதாய் உள்ளது. எனவே, வெறும் வாக்குறுதிகளையும் ஆசைகாட்டல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் நம்பி ' விட்டுக்கொடுத்தல் என்ற மேதா விலாசத் தைக்காட்டப்போய் ஏமாந்து விடக் கூடாது. இவ்வாறு நடக்குமாயின் குளிக்கப்போய் சேறு பூசிய கதையாக அதுமாறி, மன்னிக்க முடியாத வரலாற்றுத் துரோ கமாகவும் அது அமையும்.

வடக்கு - கிழக்கில் புலிகளின் தலைமையின் கீழ் இடைக்கால நிர்வாக மொன்று வழங்கப்படும் போது, அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டதாக எத்தீர் வையுமே முஸ்லிம் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளக் கூடாது. இடைக்கால நிர்வா கத்தில் தனி நிர்வாக அலகைத்' தான் முஸ்லிம் காங்கிரஸ் கோர வேண்டும். இதற்கு மாறான எத்தீர்வும் மிகவும் அபாயகரமானதாகவே அமையும். வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்கள் அனைவரினதும் கருத்தும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பா.உ. அனைவரினதும் கருத்தும் இதுவென்பதால் இதிலே எந்த விட்டுக் கொடுப்பையும் மு.கா. தலைமை செய்யக் கூடாது.

இவற்றை மு.கா. தலைமைத் துவம் தம் பொடுபோக்கை, மெத்தனப்போக்கை தூக்கி எறிந்துவிட்டு ஆழமாக விளங்கிக் கொண்டிருக்குமாயின் புலிகளுடன் அல்ல பேய்களுடன் பேசினாலும் எமக்குக் கவலையில்லை. ✪

## பிச்சைப் பாத்திரங்கள்

-ஜெமீல் ஹசன்-

வருடம் முழுவதும்
வயிற்றறை நெருப்பால்
சாகாமல் வாழும்
வைரஸ் இவர்கள்!

சில்லறைக் காசைத் தாக்கும்
பீடைகள், நுளம்புகள்
இசைபாடும் மேடை இவர்கள்!

தெரு,
தரு,
தரிப்பிடம்,
இவர்களின் இருப்பிடம்!

உலகம் என்னும்
சுழல் பந்தை
தடுத்தாடத் தெரியாமல்
பூச்சியத்திலேயே
வெளியேறிய வீரர்கள் இவர்கள்!

இவர்களின் கருப்பையில்
சில போடிகளின்
ரகசியத்துயில் -
இரைப்பையோ
இவர்களின் கையில்!

இவர்களின் வாழ்க்கை
ஒரு விசித்திரம்.
இவர்கள் செல்வந்தர்களுக்கு
விலைப்பத்திரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் அஷ்ரஃபின் 2ம் ஆண்டு நினைவையொட்டிய சிறப்புக்கட்டுரை

# அஷ்ரஃப் ஒரு யுகம்

-அபூஸைனப்-

உலகில் மனித சமுதாயத்திற்கு நாகரீகத்தை அறிமுகம் செய்த ஓர் இனத்தை பயங்கரவாதி என்றும், அடிப்படைவாதி என்றும் அதன் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் தடுத்து நிறுத்தும் நோக்கில் களமிறங்கி உள்ள வல்லரசுகளையும் ஆதிக்க வெறிபிடித்த அதிகாரக் கும்பல்களையும் எதிர்த்து போராடுகின்ற சூழலில், மூன்றாம் உலக நாடுகளின் வரிசையில் முதல் இடத்தைப் பிடித்துக்கொண்ட இலங்கையின் வரலாற்றுத் தொடரில் கோடிட்டுக் காட்டக்கூடிய வரலாற்றுப் புதுமைகளும் வடுக்கள் நிறைந்த கசப்பான உண்மைகளும் ஆங்காங்கே தடயம் பதித்திருந்தபோதிலும் இரண்டு பேரினவாத முகாம்களின் கெடுபிடிகளினால் களைப்படைந்து போன சிறுபான்மை முஸ்லிம்களை ஓர் அரசியல் சக்தியாக மாற்றியதுடன் ஆட்சியை தீர்மானிக்கும் அற்புத சிந்தனையை அறிமுகம் செய்த மாபெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் இறையடி சேர்ந்த இந்த இரண்டு வருடத்திலுள்ளே, சமூக நலன் சார்ந்த போராட்டம் தலைகீழாக மாறி தலைமைத்துவத்தை முன்னிலைப் படுத்தும் சுயநலப் போக்குடையவர்களின் பிரதேசவாதக் கொள்கையினாலும் கட்சி ஆரம்பிக்கப்பட்ட இடத்தையும் நோக்கத்தையும் உதாசீனப்படுத்தியதன் விளைவை, அண்மைய வாழைச்சேனை அனர்த்தம் நிருபித்துள்ளதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

காலனித்துவத்தின் சப்பாத்துக் கால்களுக்குள் நசிந்து போன இலங்கை, சுதந்திரப்போர்வையில் சிறுபான்மையினரின் உரிமையை மறுத்ததினால் பாராளுமன்ற ஆசனங்களை பகிஸ்கரித்ததுடன், ஜனநாயக மரபுவழிகளினால் பல போராட்டங்களை முன்னெடுத்த தமிழ் மக்கள், இறுதியில் ஆயுதம் ஏந்திப் போராடி இரண்டு தசாப்தகாலம் உயிர்களையும் உடமையையும் இழந்து புரியாத புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முதல் தடவையாக ஒன்றுபட்ட தமிழ் மக்களினால் இன்னொரு சிறுபான்மையான முஸ்லிம் சமுதாயம் புரியாமல் நிற்கிறது.

சமகால யதார்த்த நிகழ்வாய் சித்தரித்து நிர்ப்பந்தமாய் நிர்க்கதிக்குள்ளான எமது சமூகத்தின் எதிர்காலம் பற்றிய எதிர்வு கூறல்களை அரசியல் விஞ்ஞானியான அஷ்ரப் உணர்ந்ததன் வெளிப்பாடாய் விகிதாசாரப் பிரதிநிதித்துவ மேலாண்மையின் இரட்டை முகங்களுக்கு மாற்றுவழியாக சிறுபான்மை இனத்தவர்களை அரசாங்கத்தின் அனுசரணையாளராகவும் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் மாற்றிக் காட்டியதுடன், அரை நூற்றாண்டுக்கு மேலான போராட்ட வரலாற்றில் தமிழ் மக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்ட முடியாத இலக்கை பதினெட்டு வருடங்களில் தான் சார்ந்த சமுகத்தை இரத்தம் சிந்தாத எழுச்சிப்பாதையில் இட்டுச் சென்ற பெருமையை, தன்நிகரற்ற தலைமகன் அஷ்ரப்பையே சாரும்.

அபிவிருத்தியிலும், அடிப்படை வசதிகளிலும் புறக்கணிக்கப்பட்ட வடகிழக்கு மக்களை தேர்தல் காலங்களில் மட்டும் புள்ளடியிடும் பொம்மைகளாகவும் வாக்கு வங்கிகளாகவும் தங்களது வசதிக்கேற்ப பயன்படுத்திக்கொண்ட தென்னிலங்கைத் தலைவர்கள், முஸ்லிம் சமுதாயத்தின் ஏகப்பிரதிநிதிகளாகவும் தங்களை இனங்காட்டிக் கொண்டதுடன், முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்குமாகாணத்தில் தலைமை மையம் கொள்வதைக்கூட திரைமறைவில் தடுக்கும் கைங்காரியத்தில் கூட இறங்கியிருந்தனர்.

'கறையான்' என்று ஒதுக்கி வைக்கப்பட்ட கிழக்கு மாகாணம் 'கறையானாய்' தளமிட்டுக் கொண்டதை புவிகூட அதன் வரைபடத்தை ஒருதரம் உறுதி செய்து கொண்டன.

சமூகத்தின் விடுதலைக்காகவும் விமோசனத்திற்காகவும் ஒரு புதிய சித்தாந்தத்தை அறிமுகம் செய்து ஒற்றுமையின் மூலமாகவும் தனது ஆளுமையின் விவேகத்திலும் விரிவான சிந்தனையின் வெளிப்பாடாக மாபெரும் மக்கள் சக்தியைக் கட்டி எழுப்பி ஆட்சியைத் தீர்மானிக்கும் அற்புத தலைவரின் அரசியல் சாணக்கியத் தை உற்று நோக்கிய பரம்பரை தலைவர்கள் வியப்பால் விழிபிதுங்கலாயினர்.

வாளைப்பிளக்கும் தக்பீர் கோசத்தில் அமைதியான ஆர்ப்பாட்டமில்லாமல்லாத அகிம்சை மூலம் தனது இனத்தின் விடுதலையை அதே காலப்பகுதிக்குள் வென்றெடுத்த மாபெரும் தலைவரின் வழிகாட்டல்களையும் அவரது நீண்ட காலத்திட்டத்தின் இலக்கினையும் சமகாலத் தலைவர்கள் செயல்படுத்த முன்வர வேண்டும்.

**மாமனிதன்!**

அரசியல் சமூகத்தில்
முஸ்லிம்களின் முகங்களையும்
இனங்காட்டி வைத்த - உயர்
குணங்கொண்டவன் நீ !

இந்த அழுக்குப் படிந்த
மனிதக் குழுக்களிடையில்
விந்தையாய் உதித்த
மாமனிதச் சிங்கம் நீ !

அரசியலுக்கே அரசியல்
கற்றுக் கொடுத்த
அறிஞன் நீ !

ஒருமைகளுக்காக
உயிர் மூச்சையும் நீர்த்த
தியாகி நீ !

**-ஹனாலேனா றிசுவான்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்பா பற்றி எழுந்த சர்ச்சைகளுக்கு தீர்வாக.......

# எது உண்மையான குறும்பா

## பதிலளிக்கிறார் :- கவிக்கோ அப்துல் றஹ்மான்

மனிதர்களைப்போலவே கவிதைகளிலும் குறும்புக்காரக் கவிதைகள் உண்டு. சில நம்மைச் சிரிக்கச் செய்யும்; சில நம்மைப் பார்த்தே சிரிக்கும்.

ஆங்கிலத்தில் நகைச்சுவைக் கென்றே ஒரு தனி வடிவத்தை வைத்திருக்கிறார்கள்; லிமரிக் (Limerick). இது எப்போது எப்படித் தோன்றியது என்பதெல்லாம் தெளிவாகத் தெரியாவிட்டாலும் எட்வட் லியர் என்பவர் இதைப் பிரபலப்படுத்திய பிறகு ஆங்கில இலக்கியத்தில் இதற்கென்று தனி இடம் ஏற்பட்டு விட்டது.

நண்பர்கள் கூடிக்குலாவுகிற இடங்களில் அறுசுவையோடு ஏழாவது சுவையாக லிமரிக்கும் இருக்கும். பெரும்பாலும் வாய்மொழியிலேயே வாழ்ந்து வந்த கவிதை இது. மது விலக்குக் காலத்தில் லிமரிக்தான் மதுவாகப் பரிமாறப்பட்டதாகும்.

லிமரிக் எப்படி இருக்கும் இது ஓர் ஐந்தடிக் கவிதை. இதற்குமேல் நான் இலக்கணப்பாடத்தை நடத்தினால் அப்புறம் நகைச்சுவை போய் விடும் கல்லூரி நாட்களில் லிமரிக் அறிமுகம் ஆனபோது ஓர் ஆங்கில லிமரிக்கைத் தழுவி நான் எழுதிய லிமரிக்கைத் தருகிறேன்.

இதைப்பார்த்தால் லிமரிக்கின் உருவமும் உள்ளடக்க மும் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ளலாம்.

வள்ளுவரும் மாணவராய் ஆனார்
திருக்குறளில் தேர்வெழுதப் போனார்
முழுவுவெளி யாச்சு
பெயிலாகிப் போச்சு
பாவம், அவர் படிக்கவில்லை கோனார்!

லிமரிக்கில் கடைசி அடிதான் முக்கியம் ஒரு நகைச்சுவை வெடி, அல்லது திடுக்கிடும் திருப்பம் அதில் இருக்க வேண்டும்.

லிமரிக்கு எதுவும் 'தீட்டு' என்றில்லை. எதிலும் கை வைக்கும் மஞ்சள் கவிதைகளும் நிறைய உண்டு. நகைச்சுவையோடுதான்; சமூகத்தின் அர்த்தமற்ற சடங்குகள், மனிதனின் அருவருக்கத்தக்க பழக்கங்கள், அறிவுக்குப் பொருந்தாத பழங்க தைகள் எல்லாவற்றையும் லிமரிக் கேலி செய்யும்.

லிமரிக்கை மொழி பெயர்ப்பது சிரமம். அதன் வடிவமும் கொச்சை வழக்கும் காரணம் இருந்தாலும் அதன் போக்கைக் காட்டுவதற்கு இரண்டு லிமரிக்குகளை மொழி பெயர்த்துத் தருகிறேன். என்னைக்குறை சொல்லாதீர்கள். பாதிச் சுவைதான் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைம் என்ற ஊரில் ஒரு கிழவர்
ஒரே நேரத்தில் மூன்று பேரை மணந்தார்
ஏனென்று கேட்டதற்குச்
சொன்னார் "ஒன்று அபத்தம்;
இருதாரம் குற்றம் அல்லவா?;
டார்ஜிங்கில் ஒரு கிழவர்
பயணம் செய்தார் ரயிலில்
"தரையில் துப்பாதீர்கள்" என்று
எழுதியிருந்தது கதவில்
எனவே அவர் ஜாக்கிரதையாகத்
துப்பினார் கூரையில் !

லிமரிக்கை முதன் முதலில் தமிழுக்குக் கொண்டு வந்தவர் ஈழத்துக் கவிஞர் "மகாகவி" 1966இல் வெளியிடப்பட்ட "மகாகவியின் குறும்பா" என்ற அவருடைய தொகுதியில் நூறு குறும்பாக்கள் இருக் கின்றன.

லிமரிக்குக்கு அவர் வைத்த தமிழ்ப் பெயர்"குறும்பா"உருவத்தில் குறுகியது, எனவே குறும்பா படிக்கிறவர்கள் 'இவ்வளவு குறும்பா!" என்று கேட்டார்கள். எனவே உருவம் உள்ளடக்கம் இரண்டையுமே குறிக்கும் பொருத்தமான பெயர் "குறும்பா"

மகாகவி லிமரிக்கை தழுவியே குறும்பாவின் வடிவத்தையும் உள்ள டக்கத் தையும் அமைத்திருக்கின்றார். தமிழ் யாப்புக்கேற்ற சில மாற்றங்களுடன், சமூகத்தின் சீர்கேடு களை, மனிதர்களின் அசிங்கமான பழக்க வழக்கங்களை மகாகவி நன்றாகவே கேலி செய்கிறார். அவருடைய நகைச்சுவை நகைச்சு — வையும் செய்கிறது. சில குறும்பாக்களைப் பார்ப்போம்.

உத்தேசம் வயது பதினேழாம்
உடல் இளைக்க ஆடல்பயின் றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம்! ஆசிரியர்
ஒத்தாசையால், பயிற்சி பாழாம்

எவ்வளவு குறும்பு பாருங்கள்! 'அந்தப் பதினேழு' ஆடல் பயின்றது கலைக் காக அல்ல உடல் இளைப்பதற்காம் ஆனால் அரங் கேற முடியவில்லை. ஏன்? கல்வியில் 'மெய்' மறந்து விட்டார்கள். பரதம் படிக் கப்போய் பாவம் படித்துக் கொண்டார்கள் ஆசிரியர் 'பருவத்தே பயிர் செய்து விட்டார். விளைந்து விட்டது. ஆடிய கூத்தில் உடல் இளைப்ப தற்குப் பதில் 'பருத்து' விட்டது அந்தரங் கத்தை எப்படி அம்பலம் ஏற்ற முடியும்?

எல்லாம் நடந்தது ஆசிரியர் 'ஒத்தாசை' யால்தானாம் எவ்வளவு குறும்பான சொல்! அவளும்தான் காரணம் என்று இந்தச் சொல் உளவு சொல்கிறதல்லவா? பயிற்சி பாழாம், பயிற்சி மட்டுமா?

வெறும் சிரிப்பைய மூட்டுகிறது இந்தக் குறும்பா? ஆடற்கலையின் இன்றைய அவல நிலையை அல்லவா தோலுரித்துக் காட்டுகிறது.

மற்றொரு குறும்பா சீலன் முத்தெடுக்க கடலில் மூழ்கினான். அவன் காலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டது எனவே கூட்டிக்கொண்டு போக காலன் வந்து நின்றான். ஆனால் வந்தவன் தன் வேலையை முடிக்காமலே லேயே திரும்பிப் போய்விட்டானாம். ஏன்? எல்லாம் நம் நாட்டின் கீர்த்திமிக்க 'கைத்தொழி' லின் மகிமைதான்!.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி வந்தவனின்
கைத்தலத்தில் பத்து முத்தைப்
பொத்திவைத்தான் போனான் முக்குலன்!

கடவுளைத் தரகனாக நினைத்துக் காணிக்கை என்ற பேரில் அவனிடம் பேரம் பேசுபவர்கள்தாமே நாம் இலஞ்ச லாவண்யம் அங்கிருந்துதனே ஆரம்பம். 'அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' இருக்கும் அந்தரியாமி ஆண்டவனுக்கு அடுத்தபடி இலஞ்சம்தானே, இங்கே சுத்தப்படுத்துகிற சோப்பிலும் அல்லவா கறை! பத்தே முத்துக்குத் தரும் தேவனே தருமத்தைக் கைவிடத் தயாராயிருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனாலும் லஞ்சவாசி ரொம்பவும் குறைந்து விட்டது. ஒரு நாட்டின் ரகசியம் ஐம்பது ரூபாவுக்குக்கிடைக்கிறதே!

இந்த வியாபார யுகத்தில் காதலுக்கும் விலை உண்டு. கல்யாணம் இங்கே ஒரு வியாபாரமாகி விட்ட கொடுமையை இந்தக் குறும்பா எவ்வளவு குறும்பாகச் சொல்கிறது பாருங்கள்.

சொந்தத்தில் கார், கொழும்பில் காணி
சோக்கான வீடு, வயல், கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின்பால்
சிந்தை இழப்பான் தண்டபாணி!

மாமன்னன் குலோத்துங்கன், பகைவர்களை எல்லாம் வென்று வாகை சூடியவன், குவலயம் நடுங்க அரசாண்டவன். ஆனால் அவனை ஒரு புலவன். கொன்று விடுகிறான் எப்படி.

குலோத்துங்கன் வாகையோடு மீண்டான்
குவலயமே நடுங்க அரசாண்டான்
"உலாத்துங்கன் பேரில் இதோ"
–ஒரு புலவர் குரலெடுத்து
"நிலாத்திங்கள்" எனத் தொடங்க மாண்டான்

மஹாகவியின் குறும்பு மஹாதேவனையும் விட்டு வைக்கவில்லை.

இருகின்றாள் அன்னை பராசக்தி
அண்டங்கள் உண்டு பண்ணல் நத்தி
கூடநின்றார் கூறுகின்றார்
கூத்தர் "உயிர் தோற்றமுற
ஏடி அம்மா ஈதல்ல உத்தி!"

மஹாகவி குறும்பாக்களின் சிரிப்பு வெறும் சிரிப்பல்ல. அது சிந்தனையைத் தூண்டும் சிரிப்பு; கண்ணீரை வரவழைக்கும் சிரிப்பு கழுவுகின்ற சிரிப்பு.

ஒவ்வொரு குறும்பாவிலும் ஒரு சிரிப்புச்சுடர் இருட்டில் ஒளிந்திருக்கும் அசிங்கங்களை ஆடாசங்களை அற்பத்தனங்களை அந்தச்சுடர் வெளிச்சம் போட்டுக்காட்டி விடுகிறது.

புத்திசாலிக்குழந்தைகள் குறும்பு செய்வார்கள். மகாகவியின் குறும்பாக்கள் புத்திசாலிகள்.

நன்றி: உள்ளங்களைனால் தூங்கிக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கான இடைவெளி

-அபூஸர்பான்-

ஒழுக்கத்தில் உருகித்தான்
இதயத்தில் கரைந்தேன்
என்னில் நீ
சந்தேகம் கொள்ள வேண்டாம்

உனக்கான உடன்பாடுகள்
என்னில் நிறையவே இருக்கின்றது
இதில் முரண்பாடுகளில்லை
நமக்கான பிடிமானங்களோடு
நாம் வாழலாம்

உனைக் காதலி என்று
அழைப்பதை விட
வாழ்க்கைத் துணைவி என்று
அழைக்கட்டுமா? அதுதான் சுகமெனக்கு
நீயும் சுகமானவள்தான்
என் கவிதைகளைப் போல!

இந்த தேசமே
புரிந்துணர்வுக்குள்
நிசப்தமாகிப் போனதே
உன் பிடிவாதம் எவ்வளவு தூரம்?

பிடிவாதம் என்பது
வாழ்வுக்குப் பிடிக்காத ஒன்று
அது அர்த்தப்படாதபோது
பின் நீ எழுதப்போகிறாயா?

உன் நினைவுத் தீபரவி
இதயம் எரிந்து கொண்டிருக்கிறது
நீயோ
மௌனங்களோடு
பூப்பறித்துக்கொண்டிருக்கிறாய்

காலம் இன்னும்
என்னுள் வேறுபாடுகளை
நிகழ்த்தவில்லை
என்மனக் கோட்டில்
உனக்கான இடைவெளி
நிரப்பப்படவுமில்லை.

மர்ஹூம் அஷ்ரஃப் நினைவாக...

# ஒரு தலைவனின் மரணம்

பேரம் பேசும் அரசியல் சந்தையில்
நீ மட்டும்
பதவிகளை
வழங்குபவனாகவே இருந்தாய்
வாங்குபவனாக இருந்ததில்லை!

உன் சொற்களுக்கு அர்த்தம் காண
அகராதிகளைத் தேடவேண்டியதில்லை
உன் மௌனங்களுக்கு பொருள்கூற
அகராதிகளே இல்லை!

எங்களால் புரிந்து கொள்ளமுடிந்த
ஒரே மௌனம்
உன் இறுதி மௌனம் மட்டும்தான்

உன் ஒவ்வொரு மௌனமும்
எங்களால் பேசப்பட்டது
உன் கடைசி மௌனம் தான்
எங்களை
ஊமையாக்கி விட்டது!

மு.மேத்தா
(நன்றி ஊர்வலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் கண்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் ஹொலிவூட் சினிமா

- அபூ நிஹாதா -

அமெரிக்காவின் ஹொலிவூட் சினிமாவுக்கும் வெள்ளை மாளிகையின் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென சிலர் நினைத்திருக்கக் கூடும். வெறுமனே இளைஞர்களின் பொழுதுபோக்கிற்காக, மகிழ்வுணர்வுகளாக (Entertainment) ஹொலிவூட் படங்கள் தயாரிக்கப்படுகின்றன எனவும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம்.

ஆனால் உண்மை அதுவல்ல, அமெரிக்க சினிமாவுக்குப் பின்னால் உயர்மட்டத்திலிருந்து மிகவும் நன்கு திட்டமிடப்பட்ட "சிந்தனைப் படையெடுப்பு" ஒளிந்திருக்கிறது என்பதனை அதனை அவதானமாகப் பார்க்கின்றவர்களால் புரிந்துகொள்ள முடியும். இச் சிந்தனைத் தாக்குதல் அமெரிக்காவின் அரசியல், பொருளாதார, கலாசார இராணுவ நலன்களைப் பாதுகாப்பதாகவும் உள்ளது. இதனாலேயே சோவியத்தின் முன்னாள் அதிபர் "குருசேவ்" ஹொலிவூட்டிலுள்ள பயங்கரவாதத்தை இவ் வாறு தன் சொற்களால் படம் பிடித்துக் காட்டினார். "அமெரிக்காவின் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை விட அதன் ஹொலிவூட்டிற்கே நான் அதிகம் பயப்படுகிறேன்"

அமெரிக்காவின் சினிமா எப்போதும் அதன் அரசியலின் கையில் ஒரு சாட்டையாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அமெரிக்க அரசியல், அதன் நலன்களுக்கெதிராக எவர் புறப்பட்டாலும் அச்சவுக்கு மூலம் அவர்களை அது பண்படுத்தும் அது கொடுக்கின்ற அடியில் அவர்கள் அப்படியே செயற்பாடு இழந்து விடுவர்.

தான் ஒருவல்லரசு என சீனா, இறுமாந்ததால் அவ்வாறு மார்டைத் தகர்க்கவென அமெரிக்க ஹொலிவூட் உடனே தயாராகிவிடும். சீனா, காட்டுமிராண்டித் தனமும் நாசகார அணுவாயுதங்களும் சுதந்திரமின்மையும் கொண்ட ஒரு நாடு எனச்சித்தரிக்கும் படங்கள் தயாரிக்கப்பட்டுவிடும்.

ஹிரோசிமா,நாகசாகியில் அமெரிக்கா அணுகுண்டு போட்டது காட்டுமிராண்டித் தனம் என்று யாராவது வாதிட்டால் "பேர்ள்ஹைபர் (Pearl Harbour) என்ற படத்தைப்பார்த்தால் போதும் உடனே அவர் "அமெரிக்கா அநியாயமிழைக் கப்பட்டுவிட்டது. அது செய்தது முற்றிலும் நியாயமானதே. ஜப்பான் செய்த கொடூரங்களுக்கு அணுகுண்டே போதாது என்று கூறத்தொடங்கி விடுவார். மேற்கில் இஸ்லாத்தை நோக்கி மக்கள் பெருமளவு வரத்தொடங்கினால் உடனே கொலை நாசகாரச் செயல்கள் மூலம் அல்லாஹ்வை நெருங்க முனையும் இரத்தம் தோய்ந்த ஓர் அரபு மனிதனைச் சித்தரித்துப் பின்னப்பட்ட ஒரு தொகைப்படங்கள் வெளியாகிவிடும். இவ்வாறு வெளியான படங்களுள் அண்மையில் வெளியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Roud up என்பதும் ஒன்று.

அமெரிக்கா இவ்வாறு சினிமாவை தன் நலன்களைக்காப்பதற்காகப் பாவித்துக் கொண்டிருக்கும் அதே வேளை "கலை கலைக்காகவே" என்ற கோஷங்களையும் நாம் காண்கின்றோம்.இக்கோஷத்தை எழுப்புபவர்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக இன்ப நுகர்ச்சிக் காக மட்டுமே கலை பாவிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். தம் நலனுக்காக, தன்னைப் பிரசாரப்படுத்துவதற்காக எல்லா ஊடகங்களையும் பாவித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா மற்றவர்களை ஏமாற்றவே இவ்வெற்றுக் கோஷத்தைப் பரவ வைத்திருக்கிறது.

ஹொலிவூட் படங்களின் மேற்குறிப்பிட்ட தன்மையை மேலும் துல்லியமாக விளக்கிட இரு உதாரணங்களைக் குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

**முதலாவது உதாரணம்:** ரம்போ என்ற தொடர்படம் இதுவரைக்கும் இதில் மூன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறான இலக்குகளை அடைவதற்காககத் தயாரிக்கப்பட்டவை. RAMBO-I ரம்போ (Silvester stalone) வியட்நாம் யுத்தத்தில் படுதோல்வியைத் தழுவி அதன் கசப்பான நிகழ்வுகளை அனுபவித்துவிட்டுத் திரும்பிய அமெரிக்க இராணுவத்தின் ஒரு வீரனின் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது. இந்த முதற்பிரிவு தொடரப்போகும் இரண்டாம் மூன்றாம் பிரிவுகளின் முகவுரையாகவே அமைந்துள்ளது. வியட்நாமில் அமெரிக்கா தோற்றது இராணுவத்தின் பலவீனத்தினாலல்ல, அமெரிக்க அரசியல் பலவீனத்தினாலேயெ என்று இப்படம் உணர்த்திக்காட்டி, ரம்போவின் சாகசங்கள், துணிகரச் செயல்கள் மூலம், உண்மையாக அமெரிக்க இராணுவத்தின் வீரம் இத்தகையதுதான் என பார்வையாளர்களை நம்பச்செய்ய முயற்சித்தது.

RAMBO-II எழுபதுகளில் வியட்நாமிய மக்களிடம் அமெரிக்க இராணுவம் வாங்கிக்கட்டிக் கொண்டவுடன் வியட்நாமிய மக்களின் வீரதீரம்பற்றி உலகமெல்லாம் வியந்து கதைக்கத் தொடங்கியிருந்தது. உலகின் கண்களுக்கு இதனை ஒரு கட்டுக்கதையாகக் காட்டவும், வியட்நாமியப் படைகள் அரக்கக் குணம் படைத்தவர்கள் என்று சித்தரிக்கவுமே இப்படம் தயாரிக்கப்பட்டது. அத்தோடு மேலைத்தேயம் அறிவியலில் முன்னேறிக் கொண்டிருக்க கீழைத்தேயம் மூட நம்பிக்கைகளில் மூழ்கிப்போயிருக்கிறது என்பதைக் காட்டவும் நுணுக்கமான முறையில் காட்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. இப்படங்களை அவதானத்துடன் பார்க்கும் ஒருவரால் நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

RAMBO-III இது ஆப்கானிஸ்தானைக் கருவாகக் கொண்டது. ஆப்கானை அநியாய ஆக்கிரமிப்புக்குள்ளாக்கிய ரஷ்யச் செங்கரடிகளை விரட்டியடிப்பதில் முஜாஹிதீன்கள் காட்டிய வீரதீரம் எண்பதுகளில் உலகப் புகழ்பெற்றதாக மாறியது. இதனை அமெரிக்கா விரும்பவில்லை. அதனாலே RAMBO - III உருவானது. ரஷ்யர்களால் கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்கத் தளபதியை ரம்போ வந்து மீட்பதாக சித்தரித்துக்காட்டுவதன் மூலம் ஆப்கானியர் பெரிதாக ஒன்றுமே செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அங்கிருந்த அமெரிக்கத் தளபதிகளாலே ரஷ்யர்களை விரட்டியடிப்பதில் அவர்கள் வெற்றி பெற்றார்கள் என்ற கருத்தை பார்வையாளர்களிடம் பதிக்க முயற்சிக்கப்பட்டிருந்தது. இதற்காக இப்படத்தில் பல்வேறு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இரண்டாவது உதாரணம்: President's First Flight எனும்படம் 90களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பிற்பாடு 'புதிய உலக ஒழுங்கு' என்ற பெயரில் அமெரிக்காவின் தலைமையின் கீழ் உலகு செல்லத் தொடங்கியது. இதற்குப் போட்டியாக யாரும் அரங்கில் இருக்கவில்லை. எனினும் அமெரிக்காவை எதிர்க்கும் ஆற்றல் இன்னும் ரஷ்யாவிடம் இருக்கிறது என்ற கருத்து பரவலாகக் காணப்பட்டது. இக்கருத்தைத் தகர்த்தெறியும் வகையிலேயே இப்படம் எடுக்கப்பட்டது. அமெரிக்காவின் தொழில் நுட்பமும் இராணுவ வல்லமையும் கேந்திர முக்கியத்துவமும் இனி உலகில் யாரிடமும் மிகைக்கப்பட முடியாதவை என்ற கருத்து பார்வையாளர்களின் மனதில் ஆழமாகப் பதியும் படி நுணுக்கம் பேணப்பட்டு இப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. படத்தில் நிகழும் சம்பவங்கள் மூலம் அமெரிக்க ஜனாதிபதி தான் நினைக்கும் எதனையும் செய்யக் கூடியவராக மற்றவர்களின் கற்பனைக்கே எட்டாத நுட்பங்கள் நிறைந்தவராக காட்டப்படும் அதேவேளை ரஷ்யத் தலைவரோ அமெரிக்கத் தளபதியின் னட்டவில்லை. அங்கிருந்த அமெரிக்கத் தளபதியின் கட்டளைகளை அடிமைபோன்று நிறைவேற்றுபவராக சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளார். முன்னர் சோவியத்தின் கீழிருந்த நாடுகளைமட்டுமன்றி உலக நாடுகள் அனைத்தினதும் தலைவர்களிடமும் அமெரிக்க பற்றிய அச்சத்தை விதைப்பதற்காகவே இப்படம் எடுக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அரபு மூலம்:
அல்முஜ்தமஉ (குவைத்)

**ஆட்சிக் கதிரை**

~வளர்பிறை நலந்தியா~

மனிதச் சஞ்சாரமேயில்லாத
வனமொன்றில் - வெறும்
மரமாகத்தான் நானிருந்தேன்

வாள் கொண்டென்னையறுத்து
இந்தப் பாவி மனிதன்தான்
தன் மனம் போல வெல்லாம்
மாற்றிவிட்டான்

கல்வி கற்கும் கரும்பலகையாய்
கன்னி தூங்கக் கட்டிலாய்
குடிசை வீட்டில் ஒருகதவாய்
கோபுர உச்சிக் கோப்பிசமாய்

நிலையாய் ஜன்னலாய்
சுவரில் சுவரொட்டிச் சிலுவையாய்
அலுவலகத்து மேசையாய்
அரங்கத்து மேடையாய்
ஆயிரம் வடிவங் கொடுத்தான்
மனிதனெனக்கு

அத்தனை பகுதியிலும்
உத்தமம்தானெனக்கு
ஆட்சிக் கதிரையாகி
அவமானப்படுவதை விடுத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தரம் தேடும் பயிலுனர் அவலம்

-எஸ். சனூனா-

தொழில் கிடைத்த மறுமாதம்
தொலைந்தது என் நிம்மதி தான்
மாதம் முடிந்தவுடன்
மாறு வேஷம் பூண்டிடுவேன்

பலசரக்குக் கடையின்
பாதையினை மாற்றிடுவேன்
அரிசிக்காரி அவள்
ஆயிரத்தை விழுங்கிடுவாள்

தேங்காய்க் காரியை நான்
தேற்ற முடியவில்லை
முண்டிப் பிடித்து அவர்
முந்நூறைப் பறித்திடுவாள்

நானூறை மனைவியிடம்
நாணத்துடன் நீட்டியதும்
சீறி எரிந்திடுவாள்
சிங்காரப் பாவை அவள்

அடுத்த வீட்டு ஆயிஷாவின்
அட்டியலைப் பார் என்பாள்
பக்கத்துப் பாயிஷாவின்
பட்டுச்சேலை வேண்டும் என்பாள்

மின்சாரம் எனில் பாய்ந்து
மிரட்டுவது சிறு நேரம்
கொஞ்சம் பொறு கண்ணே
கெஞ்சுதலாய் சொல்லிடுவேன்

சம்பளம் போதவில்லை
சத்தியமாய் கூறுகிறேன்
நிரந்தரம் கிடைத்தவுடன்
நினைத்ததெலாம் நான்
தருவேன்.

## கண் சிமிட்டும் காதல்



மருதூர்செல்வி
பௌசிய இப்றாகிம்

சுதந்திர வதனத்தின்
சத்திய நாதத்தின்
இலட்சியக் காதலிது

கண் சிமிட்டும் காதலுக்கு
கை மொழியே
வேண்டுமென
நித்தமும் தான்
கனவுகண்டேன்
நித்தியமாய
விழிவைத்தேன்.

அந்திமத்தின் கன்னரில்
சிந்தையும் இழந்து
நின்றேன்.
சீதனமெனும் சந்தையிலே
காதலினும் தோற்று
நின்றேன்
பத்தியாய்க் கைகொடுக்க
மனிதப்போர் நடத்தி
வந்தேன்
நித்தமும் தான்
நிதர்சனமாய்
நியதியற்று வாழுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 9, 10, GCE(O/L), (A/L), அரச போட்டிப் பரீட்சைகளுக்கு அத்தியவசியமான தகவல்கள்.

## இலங்கையில் பிரதான உற்பத்திகளும் சேவைகளும் நடைபெறுமிடங்களும்.

01. பிரிமா ஆலை - திருகோணமலை
02. சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல
03. விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பள்ளம, பதல்கொட, ஹிங்குரக்கொட
04. தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை
05. தெங்கு ஆராய்ச்சி நிலையம் - லுணுவில
06. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்தை
07. வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு
08. புற்றுநோய் வைத்திய சாலை - மஹரகம
09. ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன
10. பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுகஸ்கந்த
11. ஓட்டுப்பலகைத் தொழிற்சாலை - ஜின்தோட்டை
12. இரும்புருக்குத் தொழிற்சாலை - ஒருவல
13. டயர், ரியூப் தொழிற்சாலை - களனி
14. சீமெந்து - புத்தளம்
15. காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலிபிட்டிய, ராஜாங்கனை
16. மட்பாண்டம் பீங்கான் - பிலியந்தலை, நீர்கொழும்பு
17. உலோக (மண்வெட்டி போன்றவை) ஆலை - யக்கல
18. புடவை ஆலைகள்-துல்கிரிய, பூகொட, வியாங்கொட, வெள்ளவத்தை
19. கட்டிப்பால் தொழிற்சாலை - பொலன்னறுவை
20. பால் பதனிடும் தொழிற்சாலை - அம்பேவல
21. பால்ப்பவுடர் (லக்ஸ்பிறே) வெலிசர
22. கனிப்பொருட்கள் சுத்திகரிப்பு (இல்மனைட்) ஆலை: புல்மோட்டை
23. சீனித்தொழிற்சாலை - கந்தளாய், ஹிங்குரான, பெல்வத்தை (தனியார் ஆலை) செவனகல
24. இரசாயனத் தொழிற்சாலை - பரந்தன்
25. விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பள்ளம
26. இரத்தினக் கற்கள் கிடைக்குமிடம் - இரத்தினபுரி, கஹவத்தை, எலஹர, ஒக்கம்பிட்டி
27. அப்படைட் கிடைக்குமிடம் எப்பாவல
28. இல்மனைட் கிடைக்குமிடம் புல்மோட்டை, நாமல் ஓயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பேரறிஞர் பேகன் கூறியது-

# பேரறிஞனாக என்ன வழி

சில நூல்களை ருசி பார்க்க வேண்டும். சில நூல்களை மெல்லாது விழுங்கிவிட வேண்டும். சில நூல்களை நன்கு சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும். படித்தல் ஒரு மனிதனை முழு மனிதனாய் ஆக்குகிறது. உரையாடல் ஒருவனைத் தயாருள்ள மனிதனாக ஆக்குகிறது. எழுதுதல் ஒருவனைச் சரியான மனிதனாகச் செய்கிறது. வரலாறுகள் ஒருவனை அறிவாளியாக்குகின்றன. காவியங்கள் ஒருவனை உட்சாகமுள்ளவனாக ஆக்குகின்றன. கணக்குகள் ஒருவனை நுண்மையான வனாக்குகின்றன. தத்துவஞானங்கள் ஒருவனை ஆழ்ந்தவனாக்குகின்றன. நீதி நூல்கள் ஒருவனை கண்டிப்பானவனாக் குகின்றன. தர்க்க நூல்கள் ஒருவனுக்கு வாதாடும் திறமையை வழங்குகின்றன.

## சிந்தித்தால் நிச்சயம் நாமும் செயற்படுத்தலாம்

"நீ உன்னுடைய வேலையில் நெருக்கடியான இடத்தை அடையும் போது இனிமேல் ஒருநிமிடம் கூட அங்கு நின்று சமாளிக்கமுடியாது என்ற நிலைமை ஏற்படும் அப்பொழுதுதான் நீ உன்னுடைய மனோ உறுதியைக் காட்ட வேண்டும் ஏனெனில் அந்தக் கணத்தில் அந்த இடத்தில் வைத்துத்தான் அலைகள் வேறுபக்கம் அடிக்க ஆரம்பிக்கும்

-ஹாரியட் பீச்சர் ஸ்டவ்-

பெரிய ஒரு படையின் தளபதியைத் தோற்கடித்துவிடலாம். ஆனால் ஒரு குடியானவனின் உறுதி நிறைந்த மனத்தைத் தோற்கடிக்க முடியாது.

-கன்ப்யூசியஸ்-

என்னை எதிர்ப்பு ஆற்றல்கள் படுபாதாளத்தில் தள்ள முயல்கின்றன. அதன் காரணமாகவே நான் வானளாவ உயர்ந்துவிட்டேன்.

-பேர்னாட்ஷா-

மனிதனுக்கு வேண்டியது மூன்றே மூன்றுதான். முதலாவது முதுகெலும்பு, இரண்டாவது முதுகெலும்பு, மூன்றாவது முதுகெலும்பு

-ஓர் அறிஞன்-

ஒரு சமயத்தில் ஒரு காரியத்தை உடனே செய்து முடிப்பதுதான் பலகாரியங்களைச் செய்வதற்கான வழியாகும்.

-ரெவரண்ட் ரிச்சர்ட் செஸில்-

எனக்கு அதிகமாகத் தேவைப்படுபவர் யார்? என்னால் இயன்றதைச் செய்யுமாறு தூண்டும் மனிதர்களே.

-எமர்சன்-

இப்பொழுது சிறிய விடயங்களைச் செய் நாளடைவில் பெரிய காரியங்கள் தங்களையும் செய்யுமாறு உன்னிடம் கேட்டுக்கொண்டு உன்னை வந்தடையும்.

-ஓர் அறிஞன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஜ்டா

# நீ ஒரு லீட்டர் கோலா வாங்கினால் ஒரு முஸ்லீமைக் கொல்ல ஒரு குண்டை வாங்குகிறாய்!

பெப்சி, கோக் ஆகியவை அமெரிக்கா விலுள்ள மிகப் பெரிய குளிர்பானக் கம்பனிகள். இவைகள் தயாரிக்கும் குளிர் பானங்கள் இன்று உலகம் முழுவதும் பரவலாகக் கிடைக்கின்றன.

மேலை நாட்டுக் கம்பனிகளின் பானங்கள் என்ற கவர்ச்சி ஒரு புறம்.. இந்தக்கம் பனிகள் செய்யும் பிரம்மா ண்டமான விளம் பரங்கள் இன்னொருபுறம்.

ஆம் கடந்த 2000மாவது ஆண்டில் மட்டும், கொக்கா கோலாவும் பெப்சி கோலாவும் விளம்பரத்திற்காக ரூபாய் 2,30,000 கோடி செலவிட்டுள்ளன. ஒரு சிறிய நாட்டின் ஒரு வருட மொத்த வரவு செலவுக் கணக்கின் தொகை இது. இதனை ஓராண்டுக்கு வெறும் விளம்பரத் திற்காக மட்டும் இந்நிறுவனங்கள் செலவிடுகின்றன.

இந்த இரு கம்பனிகளும் அவைகளுக்கு இடையில் உள்ள போட்டியில் மொத்த உலக மக்களையும் பலி கொடுக்கின்றன.

உலகின் பெரும்பாலான மக்கள் இதன் விளம்பர மோக வலையில் மாட்டிக் கொண்டுள்ளனர். மெல்ல மெல்ல இதற்கு அடிமையாகி வருகின்றனர்.

ஆம்! இந்தக் குளிர்பானங்களில் உள்ள 'காஃபின்' என்னும் ஊக்கமூட்டும் பொருள் அனைவரையும் அதற்கு அடிமையாக்குகிறது. அதுமட்டுமா இந்தக்குளிர் பானங்களில் கேஸ் ஏற்பட்டுள்ளது. (காபனேற்றட்) எனவே இதனைத் தொடர்ந்து குடிப்பதால் வயிறு நொந்தியாகிறது. பல் சொத்தையாகின்றது. ஊட்டச் சத்து குறைகிறது. வாசிங்டனிலுள்ள உலக கண்காணிப்பு நிறுவனம் என்ற அமைப் பின் அறிக்கை இதனைத் தெரிவித்துள் ளது.

இன்றைக்கு உலகில் தேனீர் பாலுக்கு அடுத்தபடியாக அதிகமாகப் பருகப்படுவது இந்தக் குளிர்பானங்கள் தாம். அமெரிக்காவில் இது தயாரிக்கப்படுவதால் இதற்கு முதலில் பலியானவர்கள் அமெரிக்கர்கள்தான். உலக மக்கள் தொகையில் அமெரிக்க மக்கள் 5%தான். ஆனால் இந்தக் கேஸ் ஏற்றப்பட்ட குளிர்பானங்களைக் குடிப்பதில் முதல் இடத்தில் இருப்பவர்கள் அமெரிக்கர்தான்.

உலகம் முழுவதும் குடிக்கப்பட்ட மொத்த குளிர்பானத்தில் 1/3பங்கை குடித்துத் தீர்த்தவர்கள் அமெரிக்கர்கள். 1999 ஆம் ஆண்டுக் கணக்குப்படி சராசரியாக ஆண்டுக்கு 211 லீற்றர் குளிர்பானத்தை அமெரிக்கர்கள் குடித்துள்ளனர்.

இதில் ஒரு வேடிக்கையும் வேதனையும் என்ன தெரியுமா? அவர்கள் குடித்த தண்ணீரின் அளவு சராசரியாக 109 லீற்றர் தான் ஆனால், இந்தக் குளிர்பானங்களை 211 லீட்டர் குடித்துள்ளனர்.

வாழ்வாதாரமான தண்ணீரை விட இந்தச் செயற்கை குளிர்பானங்களை இரு மடங்கு குடிக்கின்ற கேடுகெட்ட நிலையைப்பாரீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலை நாடுகளோடு, அமெரிக்காவோடு இந்தச் சனியன் இருந்து விட்டால் பரவாயில்லை. ஆனால் உலகமட முழுவதுமல்லவா இது தொடர்ந்து பரவுகிறது...!

குறிப்பாக அரபு நாடுகளிலும், வளர்ந்துவரும் ஏழை நாடுகளிலும் இந்தக் குளிர்பானங்களைக் குடிப்பது அதிகரித்து வருகின்றது. மெல்ல மெல்ல உலக மக்கள் இதற்கு அடிமையாகி வருகின்றனர் உலகின் மக்கள் தொகையில் 20% பேரைக் கொண்ட சீனா, குளிர்பானம் குடிப்பதில் 4வது இடத்தில் உள்ளது.

பழச்சாறுகள், பால்போன்றவற்றில் விற்றமின்கள், கல்சியம் போன்ற தாது உப்புக்கள் அதிகம் உள்ளன. இது நமது உடலுக்கு ஊட்டத்தையும், ஊக்கத்தையும் தருகின்றன. ஆனால் கேஸ் ஏற்பட்ட இந்தக் குளிர்பானங்களிலோ தண்ணீர், இனிப்புச்சுவை, தனிமணம் மற்றும் கா.'.பின் ஆகியவைதான உள்ளன.

உடலுக்கு ஊக்கம் ஊட்டும் செயலைச் செய்யும் "கா.'.பின்" ஒரு நாளைக்கு 100 மி.கிராம் வீதம் பயன்படுத்தினால், அதற்கு மனிதன் அடிமையாகி விடுவான்.

கார்பனேற்றட் குளிர்பானத்துறையில் 10 வர்க்கங்கள் உலகில் பிரபலமானவை. அவற்றில் 80% பானங்களில் கா.'.பின் சேர்க்கப்பட்டுள்ளது. இது 1999இல் எடுத்த ஆய்வில் தெரிய வந்தது.

355 மி.லீ.கொக்கா கோலாவில் 35 மி.கிராம் கா.'.பின் உள்ளது என்றும் அந்த ஆய்வு கூறுகின்றது.

உலகம் முழுவதும் இந்தக் கம்பனிகள் தங்களது கிளையைப் பரப்பிவருகின்றன. அந்தப் பகுதிகளில் இந்தக் கிளைகளை நிறுவி, அங்கேயே

குளிர்பானத் தயாரிப்புகளை தொடங்கி விடுகின்றன. இதனால் சுற்றுச்சூழல் கெடுகிறது. அண்மையில் கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில கிராம மக்கள் கொகா கோலா கம்பனிக்'கெதிராகப் போராட்டங்களை நடாத்தினார்.

பிளர்சிமாடா என்ற கிராமத்தில் கொக்கா கோலா கம்பனி குளிர்பான ஆலை ஒன்றை நிறுவியுள்ளது. தனக்குத் தேவையான தண்ணீரை ஏராளமான ஆழ்துளைக் கிணறுகளைத் தோண்டி எடுத்து வருகிறது இந்தக் கம்பனி.

இதனால் சுமார் 10 கி.மீ. சுற்றளவுக்கு கிராமங்களில் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. தினமும் 15 இலட்சம் லீற்றர் தண்ணீரை கொக்கா கோலா நிறுவனம் பூமியிலிருந்து உறுஞ்சுகிறது என்று அந்தக் கிராமத்தினர் கூறுகின்றனர். (செய்தி ஆதாரம்: தினமணி 22.06.2002)

இப்படி உலக மக்களின் பெரும்பாலானோரை அடிமையாக்குவது மட்டுமல்லாமல், பூமியில் இருந்து தேவைக்கதிகமாக நீரை உறுஞ்சி, சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கின்றன இந்தக் குளிர்பானக் கம்பனிகள். அரபு நாடுகளில் இன்று இதன் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. இன்று அராபியர்களின் ஒவ்வொரு வேளை உணவிலும் இந்தக் கோலாக்கள் இடம்பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குளிர்பானங்களை அருந்தாமல் ஒரு ரொட்டித் துண்டு உள்ளே இறங்காது என்ற நிலைதான் அங்குள்ளது. இன்னும் சொல்லப்போனால், இந்தக் குளிர்பானங்களன்றி உணவே ஜீரணிக்காது என்ற நிலையே அங்குள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் கத்தியின்றி, இரத்தமின்றி முஸ்லிம்களை இதன் மூலம் அடிமைப்படுத்தி வருகின்றனர். செல்வச் செழிப்பில் ஊறித்திளைக்கும் அரபு நாடுகளுக்கு இது புரியவா போகிறது?

தங்களது விலை மதிக்க முடியாத 'கறுப்புத் தங்கமான' பெற்றோலைத் தாரை வார்த்து இந்தக் குளிர்பானங்களைத்தருவிக்கின்றன இந்த நாடுகள். இதில் இன்னொரு மிகப்பெரும் கொடுமையும் உண்டு. இந்தக் குளிர்பானக் கம்பனிகளை நடாத்துபவர்கள் யூதப்பணக்கார முதலைகள்.

இந்தக் குளிர்பானங்கள் மூலம் வரும் கொள்ளை இலாபத்தில் ஒரு பெரும் பங்கை இவர்கள் அல்லும் பகலும் முஸ்லிம்களைக் கொன்று குவிக்கும் இஸ்ரேலுக்கு அனுப்புகின்றனர். இன்று பலஸ்தீனில் சொந்த மண்ணின் மைந்தர்கள் வீடின்றி, வாசலின்றி அகதிகளாக்கப்படுகின்றனர். உலகிலேயே அகதிகளாக அதிகமாக வாழ்பவர்கள் பலஸ்தீன் முஸ்லிம்கள்தான். யூதப் பயங்கரவாதிகள் தினமும் முஸ்லிம்களைத் தாக்கி வருகின்றனர். நவீன ஆயுதங்களைக் கொண்டு முஸ்லிம்களைக் கொன்று குவித்து வருகின்றனர். இந்த ஆயுதங்களை வாங்குவதற்குத்தான் இந்தக் குளிர்பானக் கம்பனிகள் இஸ்ரேலுக்கு பொருளுதவி செய்து வருகின்றன.

ஆதலால்தான் யூசுஃப் அல் கர்ளாவி போன்ற பெரும் பெரும் இஸ்லாமிய அறிஞர்கள் பெப்சி, கொக்கா கோலா போன்ற குளிர்பானங்களை அருந்தக் கூடாது என்று தீர்ப்பளித்தனர்.

"நீ ஒரு லீற்றர் கோலா வாங்கினால் ஒரு முஸ்லீமைக் கொல்ல ஒரு குண்டை வாங்குகிறாய் என்று அர்த்தம்!" என்று அறிவுறுத்தினார் அறிஞர் யூசுஃப் அல் கர்ளாவி.

ஆம்! உடலுக்குத் தீங்கு விளைவிக்கின்ற எந்த ஒரு பொருளையும் இஸ்லாம் தடை செய்கின்றது. இந்தக் குளிர்பானங்கள் உடலுக்கு மட்டுமா தீங்கு விளைவிக்கின்றன? சுற்றுச் சூழலையும் சீர்கெடுக்கின்றன. ஒரு பெரும் கூட்டம் மக்களை அடிமையாக்கு கின்றன எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சமூக மக்களைக் கொன்றொழிப்பதற்கு உதவுகின்றன.

ஆதலால் முஸ்லிம்கள் இவைகளை விட்டும் தூரமாகி விடவேண்டும். இதனை ஒரு பிரச்சாரப் பணியாக மேற்கொண்டு அறிவுறுத்த வேண்டும். விழிப்புணர்வு ஊட்ட வேண்டும்.

**நன்றி:**

**இம்பெக்ட் இன்ரர்நெசனல் ஊடாக வீடியல் வெள்ளியிலிருந்து (இந்தியா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பி கடவுளானால், சிலை எந்தச் சாதி ? (உருவகக்கதை)

எஸ்.முத்துமீரான்

மாபெரும் கும்பாபிஷேகம் சரித்திரப் பெருமை வாய்ந்த அவ்வாலயத்தில் எழுந்தருளி எல்லோரையும் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் முருகனின் அன்பு வேண்டிய பக்தர் கூட்டம், ஆலயத்தினுள்ளே நிரம்பிக்கொண்டிருக்கிறது. ஆலயம் பக்தர்களின் அரோகராச் சப்தத்தினால் இடிந்து விழும்போல் இருக்கிறது எங்கு நோக்கினும் மக்கள் கூட்டடம் "முருகனின் முகத்தில்தான் எத்தனை கனிவு அவன் அங்கங்களில் தான் எவ்வளவு பொலிவு. முருகனின் உருவத்தைக் காணும்போது உள்ளமெல்லாம் குளிர்கிறது. இந்த முருகனின் சிலையைச் செதுக்கியவனல்லவோ தெய்வீகச் சிற்பி!"

ஆலயத்தின் உள்ளிருந்து வருகின்ற பக்தர் ஒருவர், கும்பாபிஷேகம் செய்யப்படும் முருகப்பெருமானின் அழகையும், அவனை வடித்தெடுத்த சிற்பியையும வாயாரப் புகழ்ந்துகொண்டு வரகிறார். அப்பொழுது ஆலயத்தின் வெளி மூலையில் மனிதன் ஒருவன் வாய்விட்டு அழுதுகொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி பக்தர் கூட்டம் கூடிநிற்கும் பக்தர் கூட்டத்தில் ஒருவித சலசலப்பு சிலர் கூத்துக்கு மேளம் தட்டுவதைப் போல், அவன் அழுகைக்கு உரமிட்டுக் கொண்டிருக்கின்றனர். இன்றும் சிலர் சும்மா கிடந்த வாய்க்கு ஒருபிடி அவல் கிடைத்த மாதிரி, அவனைப்பற்றி பேசிக் கொண்டிருப்பதில் பூரிப்படைந்து கொண்டிருக்கின்றனர். அவன் எதையும்சிந்தியாமல் அழுதுகொண்டே இருக்கின்றான். அவன் ஒரு பேயனா?

விடைகாண முடியாத புதிரா?

சிந்தனையோட்டத்தில் மொட்டவிழ்ந்து விரிகிறது. எங்குமே பக்திப்பரவசம்.

சிற்பியையும், அவன் வடித்த முருகனின் உருவத்தையும் உள்ளம் குளிர புகழ்ந்து வந்த பக்தர், அழுது கொண்டிருக்கும் மனித னைச் சூழ்ந்து நிற்கும் கூட்டத்தை நெருங்கி, விஷயத்தை வினாவுகிறார்.

"ஏன் இந்த மனிதன் அழுது கொண்டிருக்கிறான்? இவனுக்கு என்ன குறை?

"இவனுக்கு எந்தக் குறையுமே இல்லை. இவனொரு கைதேர்ந்த சிற்பி எண்ணற்ற அழகுச் சிலைகளை வடித்தவன். ஆலயத்தின் உள்ளே, கும்பாபிஷேகம் செய்யப்படும் முருகனின் திருவுருவத்தை வெள்ளியினால் செய்த சிற்பிதான் இவன் பாவம்! தான் வடித்த சிலைக்கு செய்யப்படும் கும்பாபிஷேகத்தை ஆலயத்தினுள்ளே சென்று பார்க்க முடியாத துர்ப்பாக்கியம் பிடித்த சாதியில் பிறந்ததை எண்ணித்தான் இவன் அழுதுகொண்டிருக்கிறான்". கூட்டத்திலிருந்து ஒருவர்! ஆசிரியரின் கேள்விக்கு விடையைக் கூறிவிட்டு இருப்பிடம் நோக்கிச் செல்லும் மாணவனைப்போல், பக்தரின் கேள்விக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலைக் கூறிவிட்டு, கூட்டத்தைப்பிரிந்து கொண்டிருக்கிறார். எவன் உயர்ந்த சாதி? சாதியைப் படைத்தவன் யார்?

படைத்தவன் பாதையோரத்தில் நின்று அழுகிறான். அவன் படைப்போ எவரு டைய பாதமும் படாத கர்ப்பக்கிருஹத் தில், இருந்து சிரிக்கிறது. ஞானம் பெரி தா அல்லது அதைக் கூறும் ஞானியா?

சிந்தனை விரிகிறது, கடவுள் என்ற சிக்கலான முடிச்சு அவிழ்கிறது. சூனி யம் அகல்கிறது. ஆலயத்தின் உள்ளி ருந்து வந்த பக்தர் முருகனை வடித்த சிற்பியின் பாதங்களில் தஞ்சமடைகிறார்

சிற்பி கடவுளானால், சிலை எந்தச் சாதி? (நன்றி: இயற்கை)

## தெளிவு நிலை வேண்டி

—பாஸின் ஸாலிஹ்—

தெளிவு நிலை வேண்டி இன்னும்
தேடி எங்கும் அலைகின்றேன்

குவலயத்தின் குறை தீர்க்க
கொள்கைகள் தத்துவங்கள்
எத்தனையோ எத்தனையோ
ஏன் அவற்றிற்குறவு இல்லை
நின்றபடி கால் நீட்டு என்பதொன்று
இருந்து பின் கால் நீட்டு என்பதொன்று
தெரிந்தெடுப்பதெதை என்று புரியவில்லை
தேர்வதற்கு வழி எதுவும் தெரியவில்லை.

உண்டென்பார் இல்லையென்பார் - இறை
ஒன்றென்பார் பலவும் என்பார்
சண்டை பல போட்டிடுவார்
சாதிமதம் போற்றிடுவார்
விண்டவரும் கண்டவரும்
வேதனையால் வாடி நிற்க
கொண்ட கொள்கை பெரிதென்று
குலைத்திடுவார் அமைதியினை

மூலமுதற்பொருள் இல்லையென்றால்-ஞாலம்
முற்றாய் அமைந்தது எப்படியோ?
காலம் இயற்கையாய்க் கண்டதுவோ-ஒரு
காரணம் இல்லாமல் காரியமோ?

உண்டு விதி என்றொரு சார்
இல்லையென்று மற்றொருசார்
பண்டுதொட்டு இன்றுவரை
பார்பிரிக்கும் பெரிய திரை
விதியதுதான் வலிதானால்
வினைக்கேதும் பயன் உண்டோ?

விதித்ததொரு முடிவு
வகுத்திடவும் வழிகுறைவு
போதித்தவர் கொள்கைகளைப்
புகுத்திவிட முயன்றிடுவார்
வாதத்திறன் உடையோர்
வகையறியார் வாய்பொத்தி
வேதப்படி என்பார்
விளக்கமில்லை ஒரே குளப்பம்

ஆற்றுவது பெரும் முயற்சி
அடைவதற்கு மறுமலர்ச்சி
போற்றுவதால் அகிம்சை நெறி
மாற்றிடலாம் அதர்ம வெறி
ஏற்ற வழி இதுவல்ல
எனக்கூறும் மறுகொள்கை
சாற்றும் வழி ஏற்றிட்டார்
சாக்காடு சகமெல்லாம்!

தெளிவு நிலை வேண்டி இன்னும்
தேடி எங்கும் அலைகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனும் காற்றும்

-எஸ்.எம்.அய்யூப்-

"கவிஞனுக்கும் கவிதைகளுக்குமிடையே
தடைகள் இட்டவரின்
தாடைகளை உடைப்போமா?

கவிஞனுடன் தினம் கதைக்கும்
இன்பக்
காற்றுடன் சேர்ந்து நாம் கலப்போமா?

இக்கவிதை இறந்த பின்னும் வாழும் வரம் பெற்ற ஒரு கவிஞனின் வரிகளாகும்.

தன் அரசியல் சிந்தனைகளாலும், ஆளுமையாலும், கவித்துவத்தாலும் பலர் மனங்களிலும் வாழும் அந்த மனிதர் வேறு யாருமல்ல "கவிஞர் எம்.எச்.எம். அஷ்ரஃப்தான் அவர்"

அக்கவிஞர் திலகம் அஷ்ரஃபினுடைய இக்கவிதை காற்றுக்கும் கவிஞனுக்கும் முடிச்சுப் போடுகின்றது. காற்றையும் கவிஞனையும் மணம் முடித்து வைக்கிறது. காரணம் காற்றுக்கும் கவிஞனுக்கும் தொடர்பிருக்கிறது.

காற்று இல்லாத இடமேயில்லை.
கவிதையில்லாத இடமுமில்லை.
கருப்பையில் இருந்து குதிக்கும் குழந்தைக்கு சுவாசிப்பதற்குக் காற்று தேவைப்படுகிறது. காற்று தேவைப்படும் அதே குழந்தைக்கு கவிதையும் தேவைப்படுகிறது. தாலாட்டு என்பதும் இசை கலந்த கவிதைதானே!

கவிஞனும் காற்றும் பரஸ்பரம் பண்டமாற்றம் செய்கின்றனர். காற்றைப் பற்றிக் கவிஞன் கவி படைக்கிறான். இதற்கு நன்றி செலுத்தும் முகமாக கவிஞனின் புகழை காற்று எல்லா இடங்களிலும் பரப்புகின்றது. காற்று மனிதனின் நுரையீரலைத் தொட்டுத் திரும்புகிறது. வாழ்க்கை தந்த அனுபவத்தில் கவி படைக்கும் கவிஞனின் கவிதை, ஆன்மாவைத் தொட்டுத் தழுவித் திரும்புகின்றது.

உடம்பில் எழும் புழுக்கத்தை காற்றுத் துடைக்கின்றது உள்ளத்தில் எழும் புழுக்கத்தை கவிதை முந்தானை கொண்டு துடைக்கிறது. காற்று இயற்கையானது, ஐம்பூதங்களில் ஒன்று கவிதையும் இயற்கையானது, கவிதை படைக்கும் கவிஞன் ஐம்பூதங்களால் ஆனவன்.

காற்று இருப்பதனால்தான் மின் விசிறி அதனைச் சுற்றித் தருகின்றது. கவிதை இருப்பதனால்தான் கவிஞன் வழியே அது பீறிட்டு வருகிறது. மூங்கிலுக்குள் காற்று சென்றால் அது சங்கீதமாக வெளிப்படுகிறது. கவிஞனுக்குள் அனுபவம் சென்றால் அது கவிதையாகக் கனிந்து வருகிறது.

கொடி அசைந்ததில் காற்று வந்ததா?
காற்று வந்ததில் கொடி அசைந்ததா?
என்பது ஒரு கவிஞனின் பாடல். கவிஞன் என்பதால் கவிதை எழுதுகிறானா? கவிதை எழுதுவதால் கவிஞனா என்பது எனது தேடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்திரத்தின் வளைவுக்கேற்ப காற்று இருக்கும் உருளை வடிவப் பாத்திரத்தில் உருளை வடிவிலும், வட்ட வடிவப் பாத் திரத்தில் வட்டவடிவிலும் காற்று இருக் கும். பாத்திரத்தின் தன்மைக்கேற்பவே கவிஞனின் கவிதையும் இருக்கும் பாத்திரம் அழும்போது கவிதையும் அழும், பாத்திரம் சிரிக்கும்போது கவிதை யும் சிரிக்கும்.

காற்றுக்கு கட்சி பேதமில்லை வர்க்க வேறுபாடுகள் இல்லை, தேச எல்லைக் கோடுகள் இல்லை. உயிரினங்கள், சடப்பொருட்கள் எல்லோருக்கும் எல்லா வற்றுக்கும் சேர்த்தே காற்று வீசுகின்றது. கவிஞனும் அப்படித்தான். எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் சேர்த்தே கவிஞனும் கவிதை பாடுகிறான். காற்றுப் பட்டால் வறுத்த கடலை இழகிவிடும் கவிதை கேட்டால் ஒறுத்த இதயமும் அழுது விடும்.

கவிதை புனைவதற்கு காற்று வீசும் சூழல் கனிந்த சூழல். காற்று வீசும் கடற்கரை, ஆற்றங்கரை - காற்று வீசும் மாலைப் பொழுது - தென்னங்கீற்றில் காற்று நுழையும் பொழுது - இங்கெல் லாம் கவிஞனுக்கு கவிதை தோன்றும். காற்றுக்குத் தடைபோடவோ கட்டுப்பாடுகளை விதிக்கவோ முடியாது. கவிஞனுக்கும் தடைபோடவோ கட்டுப்பாடு களை விதிக்கவோ முடியாது.

வளி என்பது அசையாமல் இருக்கும் காற்று. காற்று என்பது அசையும் வளி. எனவே, அசையும் வழியே காற்று. ஆகவே காற்றின் வேலை இயங்குவது.

சாதாரண மனிதன் கவிதை கொண்டு அசையும்போதே, இயங்கும் போதே அவன் கவிஞன் ஆகிறான். ஆகவே கவிஞன் இயங்க வேண்டும். காற்றுக்குப் பல நிலை. சமுத்திரங்களினூடாக அது புறப்படும்போது குளிர்காற்றாய் வீசுகி ன்றது. நிலப்பரப்பினூடாக அது பயணப் படும் போது வரண்ட காற்றாய் வீசுகின் றது.

கவிஞனும் இப்படித்தான். அமைதியான சூழலும் நிம்மதியான வாழ்வும் கிடைக்கும் போதும் அவன் கவிதைக ளும் இதமாக இருக்கிறது. போராட்ட வாழ்வு அவன் சூழலை ஆக்கிரமிக்கும் போது அவன் கவிதைகளும் அனல் வீசு கின்றன. பலஸ்தீனக் கவிஞனின் கவிதையில் அவன் மண்ணுக்கான போராட்டம் நடக்கிறது. எஸ்கிமோ கவி ஞனின் கவிதையில் பனிக்கட்டி முகம் காட்டுகிறது. எனவே காற்று கடந்து வரும் சூழலைப் பொறுத்து காற்றின் உள்ளடக்கம் அமை கின்றது. கவிதை எழுந்து வரும் சூழலைப் பொறுத்து கவிதையின் உள்ளடக்கம் அமைகின் றது.

இப்படி ஓராயிரம் தொடர்புகள் இருப்பதன் காரணமாகத்தான் காற்றோடு கவிஞனைக் கலந்து ஒன்றாகும்படி கவிஞர் அஸ்ரஃப் வேண்டுகின்றார். கவிஞனும் காற்றும் கலக்கும் போதுதான் பாடல் பிறக்கின் றது. மனிதனும் மனிதனும் கலந்தால் பொல்லாப்பில் முடிகின்றது. கவிஞனும் காற்றும் கலந்தால வியப்பில்முடிகிறது. மூங்கிலுக்குள் இருக்கும் காற்றோடு கலக் கும்போது அழகிய பாடல் கிடைக்கிறது.
(மிகுதி 36ம் பக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீறலின் கணனிப் பக்கம்

JCS ஆசிரியர் MBM பௌசான் (Stu.BIT)

நவீன உலகின் இன்றைய கதாநாயகன் களாகத் திகழ்வது கணனிகளே என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, ஆராய்ச்சி என்று அனைத்துத் துறையிலும் கணனி களின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. இருந்த போதி லும் எமது மக்களிடையே இக் கணனிகள் பற்றியகண்ணோட்டம் வித்தியாசமானதா கவே காணப்படுகின்றது. கணனிகளை வியக்கத் தக்க விந்தைகளைக் காட்டும் வித்தைக்காறனாகவே பார்க்கின்றனர். "அட இப்படியும் செய்யடா?" என்ற வினாக் களை எழுப்பி விழிகளை விரிக்கும் சமு தாயமாகவே இன்றும் இருக்கின்றது.

கணனிகளின் பாவனை மிதமிஞ்சிப்போன இக்காலத்திலும் கணனிகளைப் பற்றி கற்காதிருப்பது கவலைக்குரிய விடய மாகும். எனவேதான் கணனிகள் பற்றிய தெளிவான விளக்கங்களை சுருக்கமான முறை யில் "கீறலின்" ஊடாக வழங்குவதன் மூலம் நவீன உலகின் பிரஜைகளாக உங்களையும் பரிணமிக்கச் செய்ய நாங்கள் முனைகிறோம்.

கணனிகள் என்பது தொழிநுட்ப முன் னேற்றத்தின் விளைவினால் உருவான ஒரு இயந்திரமாகும் (Mechine) இதனால் சுயமாக சிந்திக்கவோ அல்லது முடிவுகளை எடுத்து செயற்படுத்தவோ முடியாது. கொடுக் கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இயங்கத்தக்கது. இவ்வாறு வரையறை செய்யத் தக்க கணனிகளின் பகுதிகளின் பெயர்களை நாம் முதலில் அறிந்து கொள்வது பொருத்தமானதாகும்.


**Monitor**: இது கணனியின் பார்வைத்திரையாகும். இதனூடாகவே நாம் செய்கின்ற வேலைகளை பார்வையிட முடியும். இது Visual Disply Unit (VDU) என்றும் அழைக்கப்படும்.

**Key Board** : விசைப்பலகை என்று தமிழில் அழைக்கப்படும் இப்பகுதி ஒரு பிரதானமானதாகும். நாம் தகவல்களை (Data) type செய்வதற்கும், கட்டளைக ளை (Command) வழங்குவதற்கும் இது பயன்படுத் தப்படுகின்றது.

**CPU:** இப்பகுதியும் கணனி யின் முக் கிய பகுதிகளுள் ஒன்றாகும். ஒருகண னி இயங்குவதற்குரிய பிரதான பகுதிகள் அனைத்தையும் இதுவே கொண்டிருக்கும். இதனை ஒரு மனிதனின் தலைக்கு உவமிக்கலாம்.

**Mouse:** சுண்டெலி போன்ற அமைப்பை உடைய இது இலகுவான முறையில் கட்டளைகளை (Command) வழங்குவ தற்கு பயன்படுத்தப்படுகின்றது.

**Printer:** நாம் செய்தவேலைகளை தாளில் பிரசுரிக்க (Print) இது பயன்படுத்தப்படுகின்றது.




**இவை தவிர இன்னும் அநேக விடயங்களுடன் மறு இதழில் எதிர் பாருங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் குயில் பாவமே...

-அஸீஸ் எம்.பாயிஸ்-

ம்ஹூ......ஹூ......!
ஆகா.........!!!
இந்த வாசனையை
நுகர்ந்து
எத்தனை காலமாயிற்று!

இந்தக் குளிர்த் தென்றலைச்
சுகித்து
வருடங்கள் எத்தனையாயிற்று!

மனதில் தெம்பூட்டும்
இந்தச் சாரலில்
நனைந்த ஞாபகங்கள்
வரண்ட குளத்தில் நீராய்
மீண்டும்
சுரந்து....

காற்றின் பாடலுக்கு
தலையசைத்து
நிர்வாணமாய்
மரங்கள் குளிக்கும்
காட்சியில்தான்
எத்தனை சுகம்....

ம்ஹூ...ஹூ..!
ஆகா....!
புழுதி மண்ணில்
சாரலடிக்கும் போதெழும்
இந்த அற்புத வாசனையில் மண்ணை
அள்ளித் தின்ன
ஆசை கொள்கிறதே மனசு...

வேலிக் கம்பில்
தனியாய் நனையும்
காகத்தைப் பார்க்க
பாவமாயிருக்கிறது...
குடிசையோரத்தில்
ஒதுங்கி நிற்கும்
ஆடுகளையும்தான்...

சற்று முன்
தோகை விரித்தாடிய மயில்
அந்தப் பஞ்சான் குருவி
வானம்பாடி
அழகாய்ப்பறந்த
அந்தக்காக்கா வண்ணாத்தி
எல்லாம் எங்கே
ஒதுங்கியிருக்கும்???

பொத்தல் விழுந்த வானமாய்
நீரொழுகும் கூரை....
ஈரங்களில் கசிந்து
பாதம் புதையும் களித்தரை...
என்னிடமிந்தக் குடிசையாவது
இருக்கின்றது.....

அந்தக் குயில்
பாவமே...???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கோழிக்குஞ்சு

-பஹீமா ஜஹான்-

சின்னஞ்சிறு வெண்சிறகிரண்டிலும்
புழுதி படியலாயிற்று
பஞ்சு போன்ற அதன் உடலம்
ஒடுங்கிச் சிறுத்திற்று
கூடி விளையாடிய அவளது பாதம்
தவறுதலாகக் குஞ்சின் தலை மீதேறியது
கால்களும் உடலும் நெடுநேரம் நடுங்கிச் சிறுமி
தனது பிரியம் துடிப்பதைப் பார்த்திருந்தாள்.

கருமுகிலே! உன் துளிகள் தூவி
அதன் மேனிக்கு வலுவூட்டு!
நீல விசும்பே! உன் குரல் கொண்டு
மீளாத்துயிலிருந்து அதையெழுப்பு!
வீசும் பவனமே! உனது மென்கரங்களால்
மூடிய இரு கண் மூடிகளைத் திறந்து விடு!
இனிய குஞ்சே! வலிகளைக் காலடியில் விட்டு
குணமடைந்து எழுந்து விடு!
முறையிட்டாள் சிறுமி ஆகாயம் நோக்கி.

உயிர் பிழைத்த குஞ்சு
ஒரு கண்பார்வையிழந்து தவித்தது
மிகுந்த சிரமத்துடன் இரை தேடித் திரிந்தது
இடையில் தவறிய வழி தேடிக் கீச்சிட்டவாறு
எங்கோ எங்கோ பார்த்தவாறு இருந்தது.

மரணத்தின் நிழல் அதன் தலைக்கு மேலே
கவிழ்ந்திருந்த காலைப் பொழுதில்
கடும் பிரியத்துடன் ஒரு சொண்டுத் தண்ணீரை
அண்ணாந்து குடித்தது
உலகில் அதற்கென ஆண்டவன் வைத்திருந்த
கடைசி நீர்த்துளி அது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுடன் முன்னும் பின்னும் அலைந்த சிறுமியின்
பார்வைக்குத் தப்பித் திரிந்த மரணம்
முதலில் அதன் சின்னஞ்சிறு சிறகிரண்டிலும் வந்தமர்ந்தது
சிறகுகள் கீழே தொங்கிட மெல்ல மெல்ல நகர்ந்தது குஞ்சு
அந்திப் பொழுதில் சாவு அதன் கழுத்தின் மீதேறி நின்றது
ஒரு மூதாட்டி போலச் சிறகு போர்த்தி
அசைவற்றுப் படுத்தது குஞ்சு
இரவு நெடுநேரம் வரை காத்திருந்த மரணத்தின் கரங்கள்
சிறுமி தூங்கிய பின்னர்
துண்டு நிலவும் மறைந்து வானம் இருண்ட பொழுதில்
அந்தச் சிறு உயிரைப் பறித்துப் போயிற்று.

## மனம் திருந்து

-மு. சடாட்சரன்-

மின்னி முளங்கி இடித்து
மண்ணில் பூகம்பங்கள் எழுப்பி
வளைத்துப் பிடித்து வலைக்குள் போட்டு
கொழுத்துப் பெருத்த உன் குபேரத்தலையில்
எந்த அசுப்பும் இல்லாமல்
பொல்லாத இடி விழுந்ததே!........
எங்கும் விழாத இடி....
மிகக் கவலைதான்! ........ என்றாலும்

எத்தனை உயிர்களை கிள்ளுக்கீரையாய் நீ வைத்தாய்!
மிதித்துத் துவைத்துத் துவம்சம் புரிந்தாய்?
ஒருதரமேனும் அப்பாவிகளின் துயர்கண்டு
இரங்கியதா உன் இரும்பிதயம்?
இனியும் வதைக்காதே!
உன்கொடிய கூத்துக்களை அடக்கி
மனம் மாறிவிடு!
எழுந்தது புதுக்காற்று!
உன்சுயரூபம் அம்பலமாக!
சீக்கிரமாய் நீ சிந்தித்து
மனிதாபிமானத்தை வளர்த்து
மனம் திருந்தி வாழ் ஆசுரரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்கள் பூசிய ஒரு பொழுதின் காயம்.

## சொல்லன்பன் நஸீறுதீன்

தனித்து விடப்பட்ட தென்னந்தோப்புக் கிராமத்தை இரண்டாய்ப் பிளந்து நீளும் தார்ச்சாலையின் விளிம்புகளில் உட்கார்ந்துகொண்டு கடைகளில் நின்ற படியே குசுகுசுக்கும் மனிதக் கூட்டம் தூக்கம் கலைந்த துக்கத்தில் காலைக்கதிரவனின் பாதிக்கதிர்கள் பட்டுத்தெறித்து இளை யோடும் தென்னங்கீற்றில், இணையைத் தவறவிட்டு துணைதேடி ஓலமிடும் ஒற்றைக் குயில்.

சம்பவங்களை சரித்திரம் படைக்கும் கிராமத்து வாயில்களில் எல்லாம் அவல் அசைபோடுவதை கடையில் இருந்தவாறே கவனித்துக் கொண்டிருந்த அசாறுதீ னுக்கு, இன்று ஏதோ புதிய செய்தியுடன் பொழுது புறப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது. நடந்து சென்ற இருவரின் தொடர்ந்து வந்த பேச்சுக்களில் காதை தீட்டிக்கொண்டதும் மனம் சற்று தளர்வடையத் தொடங்கியது. அந்தச் செய்தியை கேட்ட நேரத்திலி ருந்து தொய்வும் சோர்வும் கைகோர்த்து அப்பிக் கொண்டதும் இந்தச் செய்தி வதந்தியாக இருக்கக் கூடாதா? என்ன சோதனை? எப்படிப்பட்ட அவமானம்? கணப்பொழுதில் அல்லவா கிராமம் களைகட்டி விடும்.

விடிந்தும் விடியாத ஈரளிப்பில் வியர்வையில் குளித்திருந்தான் அசா றுதீன். சீனி வாங்க வந்த வாடிக்கையா ளரிடம் நிறுத்துக் கொண்டே சூசகமாக வினவிய போது, இரவோடு இரவாக நடந்த சம்பவத்தை சல்லடையாக்கி உண்மைப் படுத்தியதும் யாரோ ஓங்கி சம்மட்டியால் அடிப்பது போன்ற உணர் வில் உறைந்தவன் எத்தனை பேருக்கு பதில் சொல்வது? எப்படி இதைச் சமாளிப்பது?

ஒரு புரட்சிப்பாதையை நோக்ககிய இளைஞனை இப்படியா சேற்றில் புரட்டி விடுவது? கதிரையில் அமர்ந்தபடி இருந்தாலும் மனம் குதிரையின் வேகத்தில் குதித்துக் கொண்டிருந்தது. ஊருக்கும் உலகிற்கும் எடுத்துக் காட் டாக திருமணம் முடிக்க நிச்சயித்திருந்த ஏழைப் பெண் குடும்பத்தினர் கடைசி நேரத்தில் ஏமாற்றியதால், அவரது உள்ளம் உடைந்து கிடந்தது.

சரிந்து கிடக்கும் சமுதாயத்தை தூணாக நின்று தூக்கிப்பிடிக்க முடியாவிட்டாலும் துரும்பாக மாற நினைத்தவனை கரும் பாக கடித்துத் துப்பிக் கொண்டிருப்பதை இளவயது இருபத்தைந்தின் கண்கள் செங்கல் சூளையாகிக் கொண்டிருந்தன.

அறுபது தினங்களில் ஆரம்பிக்கும் வேளாண்மை அறுவடையில் நாள் குறித்து உறுதி செய்த இன்னொரு வனுக்கு அயல் கிராமத்தில் இரவிற்கு வெள்ளையடிக்கும் நிலாமுற்றத்தில் காவின் எழுதிவைத்த சம்பவம் ஊர்ஜிதமானதும் மகிழ்ச்சியில் உறைந்திருந்த மனம் கரையத் தொடங்கி துன்ப ஊற்றுக் கண் திறந்து பிரவாகமெடுக்கத் தொடங்கியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாமலயே அவனை விரும்பவைத்த அடி மனதில் பொரிந்து கிடப்பவற்றை பின்னோக்கி அசைபோடத் தொடங்கியது மனம். சொந்த வியாபாரத்தை தொடர்ந்து செய்துவந்தபோதும் சுதந்திரப்பறவையாய் சுற்றித்திரிந்த காலம் கறுப்புத் தோலுடன் களைகட்டிய முகத்தில் முளைவிடும் அரும்பு மீசையினால் கன்னியர்கள் தொட்டில்கட்ட நினைத்து தோற்றுப் போயினர். தனதுமாறு பட்ட சிந்தனையில் மறைந்திருந்த அசாறு தீனை எட்ட நின்று பார்த்தனரே தவிர கொள்கையை தொட்ட பெண்கள் யாருமில்லை. அலுப்பே இல்லாத கடலலைபோல் அணிதிரளும் வியாபார கும்பலுக்குள் வளைந்து கொடுத்த அலுப்புடன் கடை மூடி தனியறையில் ஓய்வெடுக்கும் போது நாய்கள் ஊளை இடும் நேரம், கதவு தட்டும் சப்தத்திற்கு திறந்ததும் ஓயெல் படிக்கும் மாணவர் தாஹிர் வரவழைத்த புன்னகையில் வலுக்கட்டாயமாக நின்றிருந்தான்.

கூச்சமும் வறுமையும் அவனில் கோலம் போட்டிருந்தது. தந்தையை இளந்த குடும்பத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த கண்கள் நிலம் நோக்கி நின்றவனை உள்ளே அழைத்து உட்கார வைத்து உபசரித்ததுடன், வந்த நோக்கத்தை புரிந்து கொள்ள ஊக்கம் கொடுத்தான் அசாறுதீன் உள்ளதை சொல்லும் படி.

மனதிற்குள் ஓர் ஒத்திகை பார்த்துக் கொண்ட தாஹிர் "உம்மாதான் ஒங்களுக்கிட்ட போய்க் கதைக்கச் சொன்னாங்க. நீங்க பண்ணினா ஏழ பொண்ணைத்தான் பண்ணுறதாம் என்று கேள்விப்பட்டம். நாங்களும் ஏழைதான். ஊடு வாசல் ஒண்டும் எங்களுக்கும் இல்ல எங்கட ராத்தாவும் ஒங்களோடதான் படிச்சதாம் ஒங்களுக்கு நன்ம கிடைக்கும் விரும்பினா எங்கட உசைமா ராத்தாவ களியானம் பண்ண கேட்டுச்வரச் சொன்னாங்க" சிக்கனச் செய்தியை தாஹிர் அவன் சிந்தனைக்குள் திணித்து விட்டு,

விழிக்குள் படர்ந்த நீருடன் வெளியேறிக் கொண்டதும் கிராமம் இரவு நேர உறக்கத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் அசாறுதீனின் தூக்கம் தூக்கத்தால் மனம் தடம்புரண்டு கொண்டிருந்தது.

விடிவிடிய அவனது அந்தரங்க ஆத்மாவின் ஆய்வரங்கத்தில் அவள் தகுதி பெற்றிருந்தாள்.

இயற்கை கூட அவளால் முழுமை பெற்றிருந்தது. அவளுக்குக் கீழும் ஒரு தங்கை இருப்பது ஞாபகத்துக்கு வந்த போது ஒரு வகையில் விடுபட்ட உறவு என்பது புரிந்தது தன் கொள்கையின் குறிப்பறிந்து கூரையைப் பிய்த்துக் கொண்டு காலடியில் கற்பூர வாசனையாய் கமழும் கோலமகள் ஹுசைமாவை மாலையிட காலத்தை சாட்சி வைத்தான் அசாறுதீன்.

இருட்டு வேளையிலே தூதனாக வந்து கொண்டிருந்த தாஹிர் வெளிச்சத்திலும் தொடர்ந்து கொண்டிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கால நீராக நான் வழிந்து கொண்டிருக்க நீர்நிலைக் கொக்காக அவன் நீண்டு கொண்டிருந்தான்.

வாரங்கள் ஓரமாகி மாதமொன்று நிறைந்த மதிய வேளையில் கடையில் ஓத்தாசையாக சாமான நிறுத்து வாடிக்கையாளரை அனுப்பி வைத்த நூதன் தாஹீரிடம் "இன்னும் மூனுமாத்தயால அறுவடை ஆரம்பிச்சிடும் அதுக்குள்ள ரெண்டறையில ஊட்ட தயாரிச்சுப்போட்டு களியானத்த வச்சுக்குவோம் அதில எந்த மாத்தமும் இல்ல. சொன்னா சொன்ன படிதான்."

வாக்குறுதியளித்தான் அசாறுதீன். வானுக்கு கையுயர்த்தி பிராத்தித்தான் ஹுசைமாவின் தம்பி தாஹிர். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. தாஹிறின் வரவு குறைந்து கொண்டு வந்தது. வீடுகட்டும் பணி தொடர்ந்து கொண்டிருக்கையில்,அறுவடைக்காலம் எதிர்கொள்ளும் போது ஏழ்மையின் இயல்பு ஏமாற்றிய நினைவுகளில் இருந்து விடுபட்ட அசாறுதீன் சுயநினைவுக்கு வந்த போதும் உணவை மறந்து உள்ளத்தில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவன், உயிர்தோழன் றஹீமைக் கண்டதும் தன் உயிரை கையில் பிடித்துக் கொண்டு, "வாடா வா, சும்மா கிடந்த சங்க ஊதிக் கொடுத்த கதையாப் போனேன்". என்று தொடங்கி தான் ஏமாற்றப் பட்டதையும் மனதின் ஆதங்கத்தையும் சொல்லி சற்று ஆறுதலான அசாறுதீனிடம்,

"டேய் ஒண்ட நண்பன் நான் உனக்கு துரோகம் செய்த சம்பவத்த கேள்விப்பட்டு ஹுசைமா வீட்டுக்குப் போய்த்தான் வாறன். இடைநிறுத்தி மூச்சுவிட்ட நண்பனிடம் பொண்ணு வீட்டுக்கு போனயாடா? ஆர்ரா மாப்புள" அவசரப்பட்டான் அசாறுதீன். "தனக்குத் தனக்கென்டா சொளகு படக்கு படக்கென்னும் எண்டு சும்மாவா சொன்னாங்க. வெளிநாடு போய் பொருள் சேர்த்து தோடம்பழ நிறத்துல ஒட்டகம் போல நெடுத்திருந்தான். கொளோகன் மனைத்துல குடும்பமே சரணகெதி அடஞ்சிட்டு. பொண்ணும் மாப்புளயும் ராத்தாட வீட்டுலதான் இருந்தாங்க. பொண்ணுட உம்மாவ தனியா அழச்சி விபரம் கேட்டன். அவ சொன்ன பதில என்னால தாங்க முடியாம போயிட்டு அதுக்கு மேல கதைக்கிறது மரியாத இல்லெண்டு நெனச்சிட்டு வந்திட்டன்."

"அப்படி என்ன சொன்னாங்க?" வெளியே சொல்ல சங்கடப்படும் நண்பன் றஹீமிடம் கோபப்பட்டதும் " ஒண்டுமில்ல நீ... நீ... அரீன் திங்கிறாம். நிசாம் காறனாம்... அதான் மாப்புளய மாத்திக்கிட்டாங்களாம் நீ உறுதியாய் இருடா அசலும் நகலும் ஒட்டாது என்று ஆறுதல் கூறும் போது அசாறுதீன் கைக்குள் இருந்த தேனீர் கிளாஸ் நொருங்கி இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விமர்சனங்கள் - அகிலரூபன்

## சிறுபான்மையினரின் சில அவதானங்கள்



சாய்ந்தமருதூரைச் சேர்ந்த அரசியல் அவதானி எம்.எம்.எம்.நூறுல்ஹக் அவர்களால் எழுதப்பட்ட நூல் இது.100 பக்கங்களைக்கொண்ட இந்நூலில் 22 மிகச் சிறந்த அரசியல் கட்டுரைகளைக் காணக்கிடைக்கிறது. இக்கட்டுரைகள் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்றில்லாமல் எல்லாக் காலங்களிலும் பேசப்படக்கூடியதும், வரலாற்று ஆவணமாக பாதுகாக்கப்பட வேண்டியதுமான ஒரு நூலாகவே இது அமைந்திருக்கின்றது. ஓரேயொரு குறை என்னவென்றால், பாரமான கருத்துக்களைச் சொல்லும் இக்கட்டுரைகள் சற்று இறுக்கம் கூடியதாகவே காணப்படுகிறது. பாமர மக்களுக்கும் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு வார்த்தைப் பிரயோகங்களை இன்னும் இலகுபடுத்தித் தெளிவுபடுத்தியிருந்தால் அடிமட்டங்களிலும் விளங்கப்பட மிக இலகுவாயிருந்திருக்கும்.

எப்படிப்பட்ட ஒரு படைப்பாக இருந்த போதும் அது மக்களைச் சென்றடைந்து பாதிப்பை ஏற்படுத்தும்வரை அது முழுமையடைவதில்லை. கோட்டுப் படிகளிலும் சிலரின் சட்டைப் பைகளிலும் குவிந்து கிடந்த அரசியல் கலாச்சாரத்தை கைநாட்டு வரை கடத்திச் சென்று அறிமுகம் செய்ததன் வெளிப்பாடே அஷ்றப் இன்னும் மக்கள் மனங்களில் நீங்காது வாழ்ந்து கொண்டிருக்கக் காரணம்.

அந்த வகையில் இந்நூல் வார்த்தைப் பிரயோகங்களில் இலகுபடுத்தப்பட்டிருக்குமானால் வெற்றிப்படியில் உச்சி வரை சென்றிருக்கும் என்பது எமது அபிப்பிராயம். மற்றப்படி சிறுபான்மை இனத்தவர் ஒவ்வொருவரும் அவசியம் பேணிப் பாதுகாக்க வேண்டிய ஒரு அற்புத நூல் இதுவாகும். விலை 150/-, 129 பீ, ஒஸமான் வீதி, சாய்ந்தமருது -05.

## தென்றல்



மாவனல்லையைச்சேர்ந்த கல்லூரி மாணவியான கிமாலா யாஸீன் என்ற இளம் பெண் கவிதாயினி ஒருவரின் முயற்சியே தென்றல். 30 பக்கங்களைக் கொண்ட இத்தொகுதியில் 34 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கிமாலாவின் சிறந்த கற்பனை வளத்தை இதில் காணக்கிடைக்கிறது. கவிதையுடனான இன்னும் ஆழமான தொடர்பு இவரை நல்லதொரு பெண் கவியாக்க வாய்ப்பிருக்கிறது. நம்பிக்கைதரும் இவரது எழுத்துக்களும் நாளை பேசப்படலாம். நூலின் தலைப்புக்களுக்கும் கவிதைகளுக்கும் இடையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள வித்தியாசம் போதாமல் உள்ள தைக் கவனித்திருந்தால் குழப்பமில்லா மல் இருந்திருக்கும். விலை: 30/-.

முகவரி: கவித் தென்றல்
கிமாலா யாசீன் 99/1,
நயாவல வீதி, மாவனல்லை

## கடைசிச் சொட்டு உசிரில்




வாழைச்சேனை எஸ். நளீமின் கடைசிச்சொட்டு உசிலரைக் காணக்கி டைத்தது. தலைப்புக் குப் பொருத்தமான அழகிய அட்டைப்படத் தையும், கவிதைக ளுக்குப் பொருத் தமாக கவிஞர் எஸ் நளீமின் ஓவியங்களும் பொருத்தப்பட்டி ருக்கும் இந்நூல் 'யாத்ரா' வெளியீடாகும். யுத்த அழுத்தங்களும் காதல் உணர்வுக ளும் கவிஞரை உணர்வு ரீதியில் ரொம்ப வும் பாதித்திருப்பதை தொகுதி சொல் கிறது. யுத்த அழுத்தங்களை வித்தியா சமான கோணங்களில் நோக்கியியிருக் கிறார் நளீம்.. நூலில் "மூன்றம வனின் புலம்பல்" ஒரு அழகிய நியாயம் கூறும் கவிதை. கஸ்டமான கவிதை 1, 2 கவிதைகளும் சிறப்பானவை. குறியீடுக ளில் சொல்லப்பட்டிருக்கும் "ஆதிக்கம்" "குரைக்க ஒரு நாய் வேண்டும்" போன்றவை பிரமாதம், இருந்தும், எதார்த் தத்தை பிசகையான கற்பனைகளில் சொல் வதைத் தவிர்ந்திருந்தால் முன்னுள்ள சில கவிதைகளும் சிறப்பாக வந்திருக்கும்.

இன்னும் சுதந்திர தினத்தைக் குறிக் கும் (1999.02.04) கவிதையில், ஓட்டமும் கவித்துவமும் இருந்த போதிலும் கவி தையில் இறுக்கம் போதாது "தங்கைக்குக் காதல் வேண்டாம்" என்று போதிக்கும் கவிஞரின் நியாயமான 05 காதல் கவிதைகளில் 'உன் மனசுக்குள் இருக் கிறேனா? "மட்டுமே முடிவில் வியக்க வைக்கிறது மற்றப்படி காதல் கவிதை களில் கவிஞர் சோபிக்கவில்லை "தாவ ணி" என்ற கவிதையின் கடைசி அடிகளில் ஒரு பிழையான கருத்தை கவிஞர் கூற முற்பட்டிருப்பட்டு தோற்றுப் போயிருக்கிறார்.

"கிராமத்து நாகரீகம் இது! வீட்டில் அடங்கிக்கிடக்க பெண்ணே பெண்ணுக்கு இட்டுக் கொள்ளும் கால்கட்டு" தாவணி ஒரு கால்கட்டு இல்லை. மற்றப்படி ஒரு சிறந்த கவிதை நூல் இது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.
விலை 95/- முகவரி: எஸ். நளீம், அரிசி ஆலை வீதி, மீராவோடை-05 வாழைச்சேனை.

## ஷரந்தீபிலிருந்து மஹ்மூத்ஸமி அல்பரூதி



ப்ரவாகம் வெளியீட்ட கத்தினரால் வெளியி டப்பட்டுள்ள 36 பக்கங் களைக் கொண்ட மொழியாக்கக் கவிதை தொகுதி இது. மொழி யாக்கப்படைப்புகளை மிக அற்புதமாக செய்து வரும் மாத்தளையைச் சேர்ந்த பண்ணாமத்துக் கவிராயரின் மேற்படி நூலில் எகிப்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"அரபுப் புரட்சி" என வரலாறு கூறும் பிரிட்டிஸ், பிரான்ஸின் சதிப்புரட்சிக்கு எதிராக குரல் கொடுத்ததன் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஒராபி பாஷா வுடனான அவரது தோழர் மஹ்மூத் ஸமி என்ற ஒரு சிறந்த கவிஞரின் எகிப்து பற்றிய ஒரு நீள் கவிதையினையும் ஸமி பற்றிய வரலாற்றுக் குறிப்பினையும் உள்ளடக்கியது. (1883 ஜனவரி 10ல் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட இக்கவிஞரை தமிழ் வாசகர்களுக்கும் அறிமுகம் செய்வதே இதன் நோக்கம் என்கிறது வெளியீட்டகம். நிறையவே சான்றாதாரங்களோடு இந்நூலினை மிகக் கவனமாகக் கொண்டு வந்திருக்கும் கவிராயரின் முயற்சி மதிக்கப்பட வேண்டியது. வரலாற்றுக் குறிப்பில் நிறையவே நபர்களின் பெயர்களும் இடங்களின் பெயர்களும் அளவுக்கதிகமாக சேர்க்கப் பட்டிருப்பதனால் குறிப்பு குழப்பத்தைத் தருகிறது. ஆசிரியர் குறிப்பினைக் கொஞ்சம் இலகுபடுத்தி இருக்கலாம்.

விலை 50/- முகவரி: ப்ரவாகம் வெளியீட்டகம், சுதந்திரக்கலை இலக்கியப் பேரவை, 09, மாத்தளை வீதி, உக்குவலை.

2ம் பக்கத் தொடர்........

கவிஞனோடு மட்டுமல்ல காற்று எல்லோருடனும், எல்லாவற்றுடனும் கலக்கிறது. உயிர்களோடு கலக்கும் போதுதான் அவற்றுக்கு சுவாசம் கிடைக்கும். பூவோடு கலக்கும் போதுதான் வாசனை பரவுகின்றது. நெருப்போடு கலக்கும் போது தான் அது எரிகின்றது. ஒவ்வொருவரும் இவ்வளவு காற்றுடன் தான் கலக்க வேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறது. அந்த அளவு முடிபுமாயின் உயிரும் நின்று விடும்.

கவிஞர்கள் இறந்த பின்னும் காற்று வாழும். அதற்கு இரண்டு காரணம்.
ஒன்று - இறந்த கவிஞனின் கவிதையை, அவன் புகழைப் பரப்ப வேண்டும்
அடுத்தது - பிறக்கப்போகும் கவிஞனோடு இரண்டறக் கலக்க வேண்டும்.
இதனால்தான் கவிஞன் இறந்த பின்னும் காற்று உயிர் வாழ்கின்றது.



**வம்மிப் பூவும்**
**வரதட்சணை கேட்கும்**
**வண்டுகளும்**

வம்மிப் பூ வெடித்து
வடிகிறது தேன்!
வண்டுகள்தான் இன்னும்
வரவேயில்லையே.
ஓ...
வண்டுகளுக்கும் இப்போது
வரதட்சனை வேண்டுமோ?-

-ஒலுவில் அஸ்ரஃப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுகோசு

பலஸ்தீன் றஷீட் ஹுசைன்
தமிழில்: எம்.ஏ.நுஃமான்

ஒரு கயிறு
ஒரு சுத்தியல்
ஒரு இரும்புக் கம்பி
தாருங்கள் எனக்கு
ஒரு தூக்கு மரத்தை
நான் ஆக்குதற்காய்

எங்கள் மத்தியில்
இன்னும் ஓர் கும்பல்
எஞ்சியுள்ளது
அவமானத்தை அது சாப்பிடுகிறது
தலைகுனிந்து நடந்து செல்கிறது
அவர்களின் பிடரியை
நிமிர்த்துவோம் நாங்கள்

எதிர்ப்படும் ஒவ்வொருகையையும்
நக்கும் ஒருவனை
எப்படி நாங்கள் எம்மிடை வைக்கலாம்?

## பின்னடைவு நூலுக்கு எழுதிய அடிக்குறிப்புகளில் சில.

பலஸ்தீன் றஷீட் ஹுசைன்
தமிழில்: எம்.ஏ.நுஃமான

சுவர்க்கம் உன்னைக் கைவிட்டால்
சுவர்க்கத்தைச் சபிக்காதே!
சபிக்காதே சந்தர்ப்ப சூழ்நிலைகளை
இறைவன் தான் விரும்புவோருக்கு
வெற்றியைக் கொடுக்கிறான்
வாள் அடித்துத் தர
அவன் ஒரு கொல்லன் அல்ல.

(நன்றி: பலஸ்தீனக் கவிதைகள்)

## நாசகாரி மழை

-ஓட்டமாவடி எம்.பீ.நளீம்-

மீண்டுமோர்
இடி மின்னல் தாக்கிற்று
சிறுகச் சிறுக சேர்த்துக்
கட்டிய வீடு பொடிப் பொடியாகிற்று

கூரையில்
குடியிருந்த சிட்டுக் குருவி
குஞ்சுடன் நெஞ்சடைத்திற்று
மோட்டில்
கூடு கட்டியிருந்த
எலிக்குஞ்சுகள் பொசுங்கிற்று.

பற்றிய பாசிச தீயில்
புற்றுற்றிருந்த கறையான்கள்
கருகிப்போயிற்று
கால நிலை மாற்றம்
காரிருள் மூண்டு
மேகம் கருவுற்று
மின்னல் இடி, வெறி
மேவிட்டு
நாச மழை பெய்கிறது

பதின் மூன்று பூ மரங்கள்
இருபது கோடி பெறுமதி
அத்தனையும் அள்ளுண்டு போயிற்று
இன ஒழிப்பு வெள்ளத்தில்

இஸ்ரேலிய வாரிசுகள்
கிழக்கிலுமுள்ளனர்
தீ வைப்பும் போராட்ட யுத்தியோ


சமாதான நம்பிக்கை
நாற்கள்
நறுக்கப்பட்டு
நாசகாரி மழையில்
நாறித்தான் போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாவது மனிதன்

உருது மூலம் : இப்திகார் ஆரிப்
ஆங்கிலம் வழியாகத் தமிழில்:
பண்ணாமத்துக் கவிராயர்



பிரகாசமான
பருவமொன்றில்
பார்வையாளர்
எண்ணற்றோர்
வருகிறார்...

அழகான அணிகளை
ஆட்டவீரரை
ஆதரித்து உற்சாகப்
படுத்தும் ஆர்ப்பரிப்பு
ஆரவாரம்.

ஆயினும் நானோ,
ஒதுங்கி நிற்கிறேன்
அனைத்திலிருந்தும்
அந்நியகப்பட்டு:

பன்னிரண்டாவது
ஓட்ட வீரனை
எள்ளி நகைத்து
ஏளனஞ் செய்கிறேன்

வித்தியாசம் இந்தப்
பன்னிரண்டாவது
மனிதன்...

ஆட்டத்திடையே
ஆர்ப்பரிப்பிடையே
தனியாயமர்ந்து
காத்திருக்கின்றான்...

சமயம் வரும்வரை,
நேரம் வரும்வரை,
சம்பவமதுவும்
நிகழ்ந்திடும் வரை,

ஆட்போதவனும்
ஆட்டத்தில் கலக்கலாம்
அவனுக்காகவும்
ஆதரவொலிகள்
அலைபுரண்டெழும்
அவர்களுள்ளொருவனாய்
அவனுக்கும் மரியாதை
கிடைக்கும்.

ஆயினும்,
அவ்விதம் நடப்பதோ
அரிதினும் அரிது..

ஆடுவோனுக்கும்
ஆட்டத்துக்கும்
பிணைப்பு ஆயுள்
பரியந்தம் என்கிறார்.

ஆயுள் பிணைப்பு
அறுந்துபோகலாம்
கடைசி விசிலுடன்
இதயத்துடிப்பும்
அடங்குதல் சாலும்,
இதயம் உடையலாம்.

பன்னிரண்டாவது
ஆட்டக்காரனாய் சமயம்
பார்த்து
சந்தர்ப்பம் பார்த்து சம்பவம்
நிகழக் காத்திருக்கின்றாய்
இஃப்திகார் இங்கே...

உனது இதயத்துடிப்பும்
அடங்கும் உனது இதயம்
உடைதலும் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்தி நவீன அமைப்பு முறையிலான துலாக்கால், பூக்கல், பூச்சட்டி, வேலிகளுக்கான கொங்றீட் கட்டைகள், கிணற்றுக் கொட்டுகள், கொங்றீட் கற்கள் போன்ற சகல விதமான பொருட்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள,

# ஏ.எம்.றிஸ்வான்

தேத்தாவடி வீதி, ஒலுவில் - 06
(ஹாரீஸ் ஹோட்டல் அருகில்)



மேலதிக தொடர்புகளுக்கு:
ஏ.எம். ஜமால்டீன் (மேசன்)
வடிகான் வீதி, ஒலுவில் - 02



## கீறல் சஞ்சிகை ஒலுவிலில் கிடைக்கும் இடங்கள்

**டிஸ்கவரி மல்டி கோணர்**
194, நெசவு நிலைய வீதி, ஒலுவில் - 02
உரிமையாளர்: எஸ்.எல். அப்துல் அஸீஸ்

**மீடியா வேல்ட்**
பிரதானவீதி, ஒலுவில் - 03
உரிமையாளர்: ஐ.பீ.எம். ஸாலிஹ்

**ஸறாபத் அல் - அக்கீல் றேட் சென்றர்**
ஹாசீம் வீதி, ஒலுவில் - 02
உரிமையாளர்: எஸ்.எம்.எம். நஸீறுதீன்

**பௌஸ் கொம்பியுட்டர் சிஸ்டம் அன் கொம்மியுனிகேசன்**
தபாலக வீதி, ஒலுவில் - 03
உரிமையாளர்: எம்.பீ.எம். பௌசான்

கீறல் தொடர்புகளுக்கு

**The Editor**
**Keeral**
**Minnal Publication**
**194, Weaving Centre Road,**
**Oluvil - 02**

Dial: 067-55157, 55193,
Fax: 067-55157
E-mail. minnal@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உங்களின் விவசாய உற்பத்திக்குத் தேவையான**

- () விவசாய இயந்திரப் பொருட்கள்
- () விலங்குகளுக்கான மருந்து வகைகள்
- () விதை நெல்
- () ஏனைய தாவர விதைகள்
- () உரவகைகள்

இதுபோன்ற அனைத்துவிதப் பொருட்களுக்கும் கல்முனையில் பெயர் பெற்ற ஒரே நிறுவனம்

# அக்ரம் பாம் ஹவுஸ்

116, பிரதான வீதி, கல்முனை

தொ.பே. 067-29157, 29257, 21157

நியாயவிலையிலான

உறுதியான எஞ்சின் பொருத்தப்பட்ட இரண்டு சக்கர உழவு இயந்திர விற்பனையிலும் இப்பொழுது கொடிகட்டிப்பறக்கிறது அக்ரம் பாம் ஹவுஸ்.

# Compac

*Electronics*

## TV, VCR, VCD
## & Hi - Fi Repairs

124B, Main Street, Addalaichenai

Dial: 067-78838

Regd.No. AD/DS/ACC/123

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org